Registered as a NewsPaper

விலை ரூபா - 07

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் - 04 | 17-03-2004 | புதன்கிழமை | ஓசை - 028

உங்களிடம் தேவை இருக்கிறது
எங்களிடம் கைதேர்ந்த நகைத் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்.

கணேசா நகையகம்
194,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 123,பஜார் வீதி, வவுனியா. (சி-9260)

- நான்கு கோரிக்கைகளை முன்வைத்து -

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## மட்டக்களப்பில் பிரச்சாரம்

### தமிழ்த் தேசியம் குறித்து வலியுறுத்து

**மட்டக்களப்பு பகுதியில் நான்கு கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்க்கூட்டமைப்பு வேட்பாளர்கள் நேற்றுப்பிரச்சார நடவடிக்கை களை முடுக்கிவிட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் ஜோசப்பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.**

*.தமிழீழ விடுதலைப்புலிகள் தான் தமிழ்மக்களின் ஏகபிரதி நிதிகள்.

*.தமிழர் ஒரு தேசிய இனம்.

*.தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு அது அங்கீகரிக் கப்படவேண்டும்.அத்தோடு தமிழர் களின் தாயகக் கோட்பாடான இணைந்த வடக்குகிழக்கு அங் கீகரிக்கப்படவேண்டும்.

*.தமிழீழ விடுதலைப்புலிகள் சிறிலங்கா அரசிற்குச் சமர்ப்பித் துள்ள தன்னாட்சி அதிகாரசபை அங்கீகரிக்கப்பட்டு அமுல்படுத் தப்படவேண்டும்.

இந்த நான்கு கோரிக்கைகளை யும் முன்வைத்து தமிழ்த்தேசி யம் என்கின்ற அடிப்படையில் இந்தத்தேர்தலில்நாங்கள் போட்டி யிடுகின்றோம் எனவே தமிழ்த் தேசியம் என்ற கொள்கைக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என மட்டக்களப்பு-வீச்சுக்கல் முனையில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சார கூட்டம் ஒன்றில் உரை யாற்றும் போது தமிழ் கூட்ட மைப்பின் மட்டக்களப்பு மாவட் டத் தலைமை வேட்பாளரான ஜோசப்பரராஜசிங்கம் தெரிவித் துள்ளார்.

## உனது சுயநலம் காரணமாக மாவீரர் தியாகத்தைச் சிதைத்துவிடாதே

### மூன்று மாவீரர்களின் தாயார் கருணாவிடம் கோரிக்கை

மாவீரர்களது தியாகத்தை, தேசிய சிந்தனையை, தேசியத் தலைமையை, உனது குறுகிய சிந்தனையால், சுயநலத்தால் சிதைத்துவிடாதே யென மட டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று மாவீரர்களின் தாயார் கரு ணாவுக்கு எழுதியுள்ள கடிதத் தில் தெரிவித்துள்ளார்.

அம் மடலின் முழுவிபரமும் வருமாறு; அன்பு மிக்க மகன் கருணாவுக்கு தமிழீழ தேசியத் துக்கு உன்னால் ஏற்பட்டிருக்கும் நிலையை நினைத்து என்உள் ளம் குமுறுகின்றது. தமிழீழ மண்ணிலே மூன்று போராளி களை மாவீரனாக கண்ட வீரத் தாய் என்ற வகையில் உனக்கு சில வார்த்தைகள் வேதனையில் கூறவேண்டியவளாக உருவாக்கி விட்டாய். நான் உனக்கு வீரம் விளைந்த மண் படுவாங்கரை மண்ணிலிருந்து எழுதுவதிலும் மிகுந்த வேதனைப்படுகின்றேன். இந்த மடலை எழுதும் போது என்பெயரை வீரத்துடன் குறிப்பிட முடியவில்லை. விபரங்களைக் கேட்கும் போதெல்லாம் நெஞ்சு நிமிர்த்தி பதில் சொல்வேன். என் மூன்று பிள்ளைகளின் வீரச்சா வுக்கு பின்னால் ஏதாவது சதி இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகின்றது. உண்மை யாக தியாகம் செய்த மட்டு - அம்பாறை மாவீரர்கள்பல மாவீரர் துயிலும் இல்லங்களில் சாதி, மத,பிரதேச வேறுபாடின்றி உறங் கிக்கொண்டிருக்கிறார்கள். அவர் களது தியாகத்தை, தேசிய சிந்தனையை தேசியத்தலைமை யயை உனது குறுகிய சிந்தனை

(8ஆம் பக்கம் பார்க்க)

## தனது சுயநலனுக்காக கருணா உங்கள் பிள்ளைகளை பலியிட அனுமதியாதீர்

### மட்டு. போராளிகளின் பெற்றோருக்கு வாகரை மக்கள் கோரிக்கை

கருணா தனது சுயநலத்துக் காக சிங்கள இராணுவத்துடன் சேர்ந்து கொண்டுஉங்கள் பிள் ளைகளைப் பலிக்கடாவாக்க அனுமதிக்காதீர்கள் இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட போராளி களின் பெற்றோருக்கு வாகரை வாழ் மக்கள் எழுதிய பகிரங்க மடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது.

மீண்டும் ஒரு உறவு யுத்தத் திற்கு நமது உறவுகளை பிரதே சவாதம் என்று கூறிசுயநலநோக் கம் கொண்ட கருணா தயார் செய்து வருகிறார். இதற்கு தனது சகோதரரானறெஜிஅவர்களை நியமித்து வாகரை வெருகல் பகுதியில் சகோதர சண்டைக்கு ரிய தயார்படுத்தல்களை செய்து வருகின்றார்.

சகோதார பாசம் என்றவகை யில்றெஜி அவர்களும் மிகவும் துரிதமாக பதுங்கு குழிகளை அமைத்து ஆண், பெண் போரா ளிகளை இரவு பகலாக தங்க ளின் சுயநலத்திற்காக காவல் கடமைகளில் ஈடுபடுத்தி வருகின் றனர்.

இவ்வளவு காலமும் மீனகம் என்ற இராணுவ தளத்தில் வைத் திருந்த பிள்ளைகள் அனைவரும் இலங்கை இராணுவத்தின் உதவியுடன் கொழும்பு வீதியால் இரவோடு இரவாக நகர்த்தப்பட் டுள்ளனர். எந்த இராணுவத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்தினோமே. அந்த இராணுவத்தின் உதவி யுடன் பிள்ளைகள் வாகரை வெரு கல் காடுகளில்சகோதர சண் டைக்காகவிடப்பட்டிருக்கின்றனர்.

திருமலையில் இருந்து தாக் குதலுக்காக தளபதி சொர்ணத் துடன்அணிகள்சண்டைக்கு வருவ

(8ஆம் பக்கம் பார்க்க)

-மட்டக்களப்பு மாவட்டத்தில்-

## கொழும்பிலிருந்து வெளியாகும் இரு தமிழ்ப் பத்திரிகைகளுக்குத் தடை

கொழும்பிலிருந்து வெளியாகின்ற இரண்டு தமிழ் பத்திரிகைகளை மட்டக களப்பு மாவட்டத்தில் விற்பனை செய்ய வேண்டாமென இனம்தெரியாத நபர்கள் நேற்று முன்தினம் அச்சுறுத்தியுள்ளனர்.

இப்பத்திரிகைகளின் அலுவலகத் திலும், அதனை கொண்டு வருகின்ற தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு ஏற்கனவே தொலைபேசியூடாக அறிவித் துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஒரு பத்திரிகை நிறுவனம் நேற்றுடன் மட்டக்களப்பிற்கான தனது விநியோகத்தை இடை நிறுத்தி யுள்ளது.

சென்ற வாரம் இங்கு தினக்குரல், வீரகேசரி பத்திரிகைகள் இனம்தெரியாத நபர்களினால் பறிமுதல் செய்யப்பட்டமை தெரிந்ததே.

## ஜே.வி.பி.வசம் பெருமளவு ஆயுதங்கள்

### அமைச்சர் ராஜிதசேனாரட்ண தெரிவிப்பு

மக்கள் விடுதலை முன்ன ணியிடம் தொடர்ந்தும் ஆயுதங் கள் இருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்தி ருக்கிறார். கொழும்பில் நேற்று ஊடக மாநாட்டை கூட்டிய அவர் தேசிய புலனாய்வுத்துறையின ரின் அறிக்கையை இதற்காகச் சுட்டிக் காட்டினார்.

ரி-56 ரக துப்பாக்கிகள் - 78, எஸ்.எல்.ஆர். ரக துப்பாக்கி கள் -60, எஸ். 84 ரகத் துப்பாக் கிகள் - 36, எஸ். எம்.ஜி. ரகத் துப்பாக்கிகள் -13, ரி. 81 ரகத் துப்பாக்கிகள் - 08, எல்.எம்.ஜி. ரகத் துப்பாக்கிகள்-11, எவ். என்.சி. ரகத் துப்பாக்கிகள் - 06, எம்.பி. 5 ரகத் துப்பாக்கிகள் - 03, எஸ். ஏ. ஆர். ரகத் துப்பாக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.பாராளுமன்ற தே.அவதானிப்புக்குழு த.கூட்டமைப்பைச்சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

ஐரோப்பிய பாராளுமன்ற உறுப் பினரும் ஐரோப்பிய பாராளு மன்ற தேர்தல் அவதானிப்புக் குழுத் தலைவரான ஜேம்ஸ்குஸ் நகானை தமிழ்த்தேசியக் கூட டமைப்பின் தலைவர் இரா.சம்பந் தன் நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் சந்தித்தித்துப்பேசி னார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப்பகுதிகளில் உள்ள தமிழ் வாக்காளர்கள் இடையூறு ஏது மின்றி சுதந்திரமாக வாக்க ளிக்கும் உரிமையை உறுதிப் படுத்த நடவடிக்கை எடுக்கவேண் டும் என சம்பந்தன் குஸ்நகா னைக் கேட்டுக்கொண்டார் சந்திப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஹக்கீமின் வருகையை எதிர்த்து அக்கறைப் பற்றில் கடையடைப்பு

அம்பாறை மாவட்டம் அக்கறைப்பற்று பிரதேசத்தில் நேற்று பூரண கடையடைப்பு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட் டுள்ளது.

தேர்தலில் போட்டியிடுகின்ற முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் அக்கரைப்பற்றிற்கு வருகை தருவதற்கு எதிர்ப்பைத் தெரிவித்தேஹர்த்தால் அனுஷ் டிக்கப்பட்டுள்ளமை, குறிப்பிடத் தக்கது.

## தேர்தல் கண்காணிப்பாளர்கள் நேற்று மட்டக்களப்பு விஜயம்

ஐரோப்பிய தேர்தல் கண் காணிப்புக்குழுவின் கண்காணிப் பாளர்கள் மட்டக்களப்பிற்கு நேற்று சென்றுள்ளனர்.

இவர்கள் தமிழ்த்தேசிய கூட்ட மைப்புதலைமைவேட்பாளர் ஜோசப்பரராஜசிங்கத்தைச் சந் தித்து கலந்துரையாடியுள் ளனர். இதன் போது புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியில்70,000 வாக்கா ளர்கள் இருக்கின்றனரென பர ராஜசிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் இவர்கள் வாக்களிப் பதற்கு யுத்தசூனிய பிரதேசத் தில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவேண்டியதன் அவசியம்பற்றி வலியுறுத் தியுள்ளார்.

## திருமலை தேர்தல் ஒழுங்குகள் குறித்து நேற்று கட்சிகளுடன் ஆராய்வு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத் தேர்தல்ஒழுங்குகள் பற்றி மாவட் டத் தெரிவத்தாட்சி அதிகாரியும், அரசாங்க அதிபருமான காமினி றொட்ரிக்கோ நேற்று செவ்வாய் மாவட்டத்தில் போட்டியிடும் அரசி யல் கட்சிகளின் பிரதிநிதி களுடன் கலந்தாலோசனை நடத் தினார். தமிழ்த் தேசியக்கூட் டமைப்பின் சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் அதன் தலைமைவேட்பா ளர் எம்.கே.ஏ.டி. எஸ். குணவர் தன ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் தலை மைவேட்பாளர் சுனில் சாந்தரணவீரவும் பங்கு

(8ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் பாதுகாப்புடன் வந்த ஈ.பி.டி.பி. யினர் தீவகத்தில் பெண்போராளிகளை அச்சுறுத்தினர்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவல்துறையின் புளியங்கூடல் சந்திப்பகுதியில் அரசியல் பணிகளில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகள் அமைப் பின் பெண்போராளிகள், ஈ.பி.டி.பி உறுப் பினர்களால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

ஈ.பி.டி.பி அமைப்பின் முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினரும், எதிர்வரும் தேர்த லில் அவ்வமைப்பின் சார்பில் போட்டியிடு பவருமான ந.மதனராஜா தலைமையி லான உறுப்பினர்களே இவ்அச்சுறுத்தலை விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் அவர்களுக்கு பாதுகாப்பு அளிப் பதற்கென கூடிவந்திருந்த பொலிசாரும், கடற்படையினரும் அங்கு பிரசன்னமாகி இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் நேற்றுக்காலை பத்து

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

15-03-04 அன்று வற்றாப் பளைக்கும் புதுக்குடியிருப்பிற்கும் இடையில் உதயநாதன் நேசடாலிங்தேவி ஆகிய எனது தேசியஅ.அட்டை (547481127X) இராணுவ அ.அட்டை, போக்குவரத்து அனுமதிஅட்டை(பாஸ்), ஜொப் காட் ஆகியன அடங்கிய பேஸ் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் ஈழநாதம் பணிமனையில்அல்லதுபூந்தளிர் நகை மாடத்தில் ஒப்படைக்கவும் சன்மானம்வழுங்கப்படும். (4059)

## போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது

(செட்டிகுளம்)

வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் வைத்து போதைப் பொருட்களினை வவுனியா பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர். எம். விஜயநாயக தெரிவித்தார். ரகசிய தகவல் கிடைத்தவுடன் விசேட குழுவினர் சென்று போதைப் பொருள் 1,230 மில்லி கிராமைக் கைப்பற்றியதுடன் சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர். (21)

# தமிழரின் ஐக்கியத்தை வலியுறுத்தி வீட்டுச்சின்னத்துக்கு வாக்களியுங்கள்

## வன்னி கூட்டமைப்பு வேட்பாளர் கனகரட்னம் கோரிக்கை

தமிழினத்தின் விடுதலை, தமிழ்த் தேசியத்தின் சுதந்திரம், தன்னாட்சிஎன்னும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு எமது தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் இன்று மக்கள் மயப்படுத்தியுள்ளார்கள். இந்த சந்தர்ப் பத்தில் தமிழினம் ஐக்கியப்பட்டு எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் உலகிற்கு அறிவுறுத்தும் வகையில் தமிழரசுகட்சியின் தேர்தல்சின்னமான வீட்டுசின்னத்திற்கு எதிராகப்புள்ளடிபோட்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களை தெரிவுசெய்வது தலையாயகடமையாகும்.

இவ்வாறு திருமுறிகண்டி 153ம் கட்டை றெட்பான நிறுவன மண்டபத்தில்கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் இராசேந்திரன் தலைமையில் நடைபெற்ற சமகால அரசியல்பரப்புரை நிகழ்வில் நிகழ்வில்கலந்து சொற்பொழிவாற்றுகையில் வன்னி மாவட்டத்தில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் சதாசிவம் கனகரத்தினம் கூறினார்.

தொடர்ந்தவர் பேசுகையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அனுசரணையுடன் பாராளுமன்றில் தமிழினத்தின் பிரதிநிதியாக குரல்கொடுக்கவும் தமிழினத்தின் விடுதலைக்காகவும் தன்னாட்சிக் கோட்பாட்டு இலட்சியத்தை வெற்றியடைய செய்வதற்கும் தமிழரசுக்கட்சித் தந்தை செல்வநாயகம் கண்டகனவை நினைவாக்குவோம் என உறுதியளிக்கிறேன் என்றார் இந்நிகழ்வில் மற்றும் அரசியல்துறையைச் சேர்ந்த தமிழ்நிலா,ராகுலன் ஆசிரியர் நாகேந்திரன் மற்றும் சிலர் அரசியல்சமகால நிலைப்பாட்டை விளக்கி உரையாற்றினர். (9)

# கணனி கற்கை நெறி பூநகரியில் ஆரம்பம்

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியின் பூநகரிக்கிளையில் கடந்த திங்கட்கிழமை கணனிக் கற்கை நெறிஆரம்பித்து வைக்கப் பட்டது. இந்நிகழ்வுக்கு கிளிநொச்சி மாவட்டதொழில் நுட்பக்கல்லூரி அதிபர் பிரபா தலைமை வகித்தார். மங்கல விளக்கை பூநகரிப்பிரதேச செயலர் வைரமுத்து, மாவட்ட தொழிற்சங்கச் செயலர் ஆகியோர் ஏற்றினர்.அரச அதிபர் தி.இராசநாயகம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். சிறப்புரைகளை பிரதேசசெயலர், மாவட்ட தொழிற் சங்க தலைவர் கணனி கற்கைநெறி விரிவுரைகளை த.தயா ரூபன் ஆற்றினார். இந்நிகழ்வில் 30மாணவர்கள் கலந்துகொண்டனர். (34)

# சிங்கள மீனவர் வருகையினால் தலைமன்னார் மீனவர் பாதிப்பு

தலைமன்னார் பழைய பாலம் கடற்கரையில் நீர்கொழும்பில் இருந்து வந்து மீன்பிடிக்கும் மீன்பிடி படகுகளின் எண்ணிக்கை 31இல் இருந்து 81 ஆக அதிகரித்தமையால் அக்கிராம மக்கள் சிங்கள மக்களை அவ்விடத்தை விட்டு வெளியேறக்கோரி மன்னார்பிரதேசச் செயலாளருக்கு மகஜர் அனுப்பியுள்ளனர். இதனை முன்னிட்டு பி.ப 4.00 மணிக்கு தலைமன்னார் பியர் மீனவர் கூட்டமைப்புச் சங்க மண்டபத்தில் மன்னார் பிரதேச செயலர் ஆர்.வவுதீஸ் வரன் மன்னார் மீன்பிடித்தி ணைக்கள உதவிப்பணிப்பாளர் மன்னார் பியர் கிராம அதிகாரிகள் உட்பட மீனவ சங்கப்பிரதிநிதிகள் ஒன்று கூடி இப்பிரச்சினை சம்பந்தமாக கலந்துரையாடினர். மக்கள் அனைவரும் இவர்களை வெளியேறக்கோரிய போதிலும் மன்னார் பிரதேசச் செயலாளர் பேசுகையில் இதனை உடனடியாக நிறுத்தாமல் படிப்படியாக நிறுத்துவது சாலச்சிறந்ததென்றும் காரணம் திடீரெனஇவர்களை நிறுத்தினால் எமது உற்பத்தி செய்யப்படும் மீன் பொருட்களுக்குதெற்குப் பகுதியில் பாதிப்பேற்படும் எனக் கூறினார். இருந்த போதிலும் மக்கள் இதனை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தார்கள். இருப்பினும் பிரதேசச்செயலாளரும், உதவிப் பணிப்பாளரும் பேசி இதனை சமாதானப்படுத்தி காலக் கிரமத்தில் செய்வதாக வாக்குறுதியளித்தார்கள். தற்சமயம் சிங்கள மீனவரின் வரு கையால் இப்பகுதி மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளானார் என்பது குறிப்பிடத்தக்கது. (மி)

## பணிநிலை வெற்றிடம்

புதுக்குடியிருப்பில் இயங்கும் அலுவலகமொன்றில் பணியாற்றுவதற்கு நல்லொழுக்கமும், தேக ஆரோக்கியமும் உடைய சுறுசுறுப்பாய் செயற்படக்கூடிய பணியாளர்கள் தேவை.

**01. கணனி இயக்குனர் (ஆண்)**

கணனித்துறையில் ஆர்வமும் MS Word படித்தவராகவும் இருத்தல்வேண்டும். எட்டு மணிநேர வேலையில் மாலை 5மணி முதல் இரவு 10 மணிவரையான நேரம் பணியாற்றுதல்வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்:- 2500 - 3400
-------------------+2000=4500/=
10x90

**02. நூலக உதவியாளர் (ஆண்/பெண்)**

சம்பள அளவுத்திட்டம்:- 2500 - 3400
-------------------+2000=4500/=
10x90

**03. அலுவலக பராமரிப்பாளர் (ஆண்)**

பணியாளர் அலுவலக உள்வேலைகளையும், அலுவக வெளிவேலைகளையும் செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்:- 2200 - 3000
-------------------+2000=4200/=
10x80

**விண்ணப்ப முடிவுத்திகதி:- 24.03.2004**

**அனுப்பவேண்டிய முகவரி:- விளம்பர இலக்கம்11, ஈழநாதம் பணிமனை, புதுக்குடியிருப்பு.**

குறிப்பு:-
பணியாளர் அலுவலகத்திலேயே தங்கிநின்று பணியாற்றுவதும், புதுக்குடியிருப்பு மற்றும் அதன் அயற்பகுதியில் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது.
(சி-7173)

## பிரிவு தாங்காது தவிக்கின்றோம்

### அமரர் காசிநாதர் குமாரசாமி
### (கடைமாமா) கண்டாவளை.

*முகாமையாளர் (அருட்பிள்ளையார் பல்வகை வாணிபம்)*

செல்லவாரிப்பிட்டி,கண்டாவளையைச் சேர்ந்த காசிநாதர் குமாரசாமி எதிர்பாராத விதமாக திடீரென எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டமையால் கடும் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கும்,உற்றார் உறவினர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மிகவும் ஆழ்ந்த கவலை யைத் தெரிவித்து, நாமும் அவர்களின் துயரில் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவைத் தாங்க முடியாது
தவிக்கும்,

**வே.கந்தசாமி குடும்பத்தினர்**
**உதயகிரி,கண்டாவளை.**

(4322)

## 10 ஆம் ஆண்டு நினைவு நாள்

பிறப்பு
1964
10
22



வீரச்சாவு
1994
03
17

வன்னிமாவட்ட சிறப்புத்தளபதி
### லெப். கேணல் ரவி
### (குமாரவேல் - ரவீந்திரகுமார்)

தன்மான உணர்வோடு தாயகம் காத்திட
புறப்பட்ட எங்கள் அண்ணாவே
உங்கள் தோழர்களோடு இணைந்து
தமிழீழ மலர்வை காண்பீர்கள் அண்ணா
உங்கள் முகமலர்வை எண்ணி ஏங்கி
தவியாய் தவிக்கின்றோம் அண்ணா
10 ஆண்டுகள் என்ன 10 ஆயிரம் யுகங்கள்
ஆனாலும் உங்கள் எண்ணம்
எம்மை விட்டகலாது.

முகவரி:-
அதிசயவிநாயகர்
கோவிலடி,
விசுவமடு.

(4323)

தகவல்:-
**குடும்பத்தினர்.**

## நீங்காத நினைவுடன்

### 2ஆம் ஆண்டு நினைவலை

மலர்வு
1978 - 01 - 01



உதிர்வு
2002 - 03 - 17

**செல்வி செல்வநிலா சுப்பிரமணியம்**
*மாதகல்*

### 1ஆம் ஆண்டு நினைவலை

மலர்வு
1957 - 02 - 13



உதிர்வு
2003 - 04 - 22

**திருமதி தர்மபாலன் தவராணி**
*மாதகல்*

ஆண்டிற்கு ஒருவராய்
அடுத்தடுத்து உமையிழந்து
ஆறாத் துயருடன்
ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்.

இன்று எமது வீட்டில் நடைபெறும் மதியபோசனத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

10ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(4321)

**சுப்பிரமணியம் குடும்பத்தினர்.**

# ஈராக்கில் நிலைகொண்டுள்ள படையினரை திருப்பியழைக்க ஸ்பெயின் அரசு தீர்மானம்!

## -புதிய மாற்றத்தால் அமெரிக்கா அதிர்ச்சி

**ஈராக்கில் அமெரிக்க படையினருடன் இணைந்து பணியாற்றும் தனது படையினரைத் திருப்பியழைக்க ஸ்பெயினில் புதிதாக பதவியேற்றுள்ள அரசு முடிவு செய்துள்ளது. பிரதமர் ஜோஸ் லூயிஸ் ரொட்ரிக்ஸ் ஸெபாடரோ இது குறித்த முடிவை வெளியிட்டுள்ளார்.**

ஸ்பெயினின் சோஷலிஸ்ட் கட்சியின் புதிய பிரதமரான ஸெபாடரோ தேர்தலில் வெற்றி பெற்றவுடன் விடுத்த அறிவித்தலில் ஈராக்கில் இருந்து ஸ்பெயின் படையினர் உடனடியாக வாபஸ் பெறப்படுமென அறிவித்தார். இந்த நடவடிக்கை அமெரிக்காவுக்குச் சார்பான வெளிநாட்டுக் கொள்கையிலிருந்து அவர் விலகிக் கொள்வதாகவே கருதப்படுகின்றது.

முன்னதாக ஆட்சியிலிருந்த மத்திய வலதுசாரி வெகுசன கட்சி அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவான போக்கை கடைப்பிடித்து வந்தது. எனினும் எதிர்க்கட்சியாகவிருந்த சோஷலிசக்கட்சி 75சதவீத மக்கள் ஆதரவுடன் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியதும் அமெரிக்காவிற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஸ்பெயினின் தலைநகர் மட்றிட்டில் இடம்பெற்ற ரயில் குண்டு வெடிப்பிற்கு அல்ஹைதா இயக்கமே பொறுப்பென தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து மட்றிட் பங்குச்சந்தையில் நடவடிக்கைகளும் பின்னடைவு கண்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. இதன்போது 140கோடி டொலர் அளவில் பங்குகளின் விலைகள் வீழ்ச்சி கண்டதாக ரொய்ட்டர் செய்திகள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் ஈராக்கின் நிர்வாகத்தை யூன்மாத இறுதி அளவில் ஈராக்கிய மக்களிடம் ஒப்படைப்பதற்கு முன்னர் ஸ்பெயின் முதலிய நாடுகள் அவற்றின் இராணுவத்தினரைத் தொடர்ந்தும் ஈராக்கில் வைத்திருப்பதற்கு வழி செய்யும் மற்றுமொரு தீர்மானம் ஒன்றை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா கொண்டு வருமென அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் பல்தேசியப்படைகளில் போலந்தின் இராணுவ வீரர்கள் இடம் பெற்றிருந்த போதிலும் அவர்களை உடனடியாகத் திருப்பி அழைக்கும் எண்ணம் அதற்கு இல்லை எனவும் போலந்து அறிவித்துள்ளது. இதேவேளை ரயில் குண்டு வெடிப்புக்கு இஸ்லாமிய போராளிகளே காரணமாக இருக்கின்றார்கள் என்று செய்தி வெளியானதைத் தொடர்ந்து ஐரோப்பிய சங்கம் அவசரமாக பயங்கரவாத எதிர்ப்புக் கூட்டமொன்றுக்குத் தயாராகியுள்ளது.



ஈராக்கில் பபிலோன் நகரில் காவலில் ஈடுபட்டுள்ள பிலிப்பைன்ஸ் படைவீரர்.

# இடைநிறுத்தம்

தென் கொரியாவிற்கும், வடகொரியாவிற்குமிடையே இடம்பெற்று வந்த பொருளாதார ஒருங்கிணைப்புப் பேச்சுவார்த்தைகள் தென்கொரிய அரசியல்நெருக்கடியால் கைவிடப்பட்டுள்ளன.

# தேர்தலில் புஷ் தோல்வியடைவார் குடியரசுக் கட்சியினர் கவலை!

அமெரிக்க சனாதிபதித் தேர்தலில் ஜோர்ஜ் டபிள்யு புஷ் வெற்றி பெறுவது சந்தேகத்திற்கிடமாகியிருப்பதாக குடியரசுக் கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.பாரிய அழிவு தரும் ஆயுதங்கள் ஈராக்கில் கண்டு பிடிக்கப்படாமை, அமெரிக்காவின் முக்கிய பிராந்தியங்களில் நிலவும் தொழில் இல்லாப் பிரச்சினை மற்றும் அமெரிக்க அரசின் பாரிய செலவினங்கள் என்பன காரணமாக சனாதிபதி புஷ் தேர்தல் தோல்வியை சந்திக்கவுள்ளதாக அவரது குடியரசுக் கட்சியினைச் சேர்ந்த காங்கிரஸ் அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.இந்நிலையில், சனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிடும் சனாதிபதி வேட்பாளர் ஜோன் ஹெரியின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாகி வருவதாகவும் கூறப்படுகிறது.

# ஸ்பெயினில் மேலும் தாக்குதல் நடைபெறலாம் ரயில் சேவைகளுக்கு பலத்த பாதுகாப்பு!

## அல்-ஹைதா நடவடிக்கை காரணம்

ஸ்பெயின்தலைநகரான மட்றிட்டில் இடம்பெற்ற ரயில் குண்டு வெடிப்பினை அடுத்து பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் ரயில்களிலும் ரயில் பாதைகளிலும் ஆயுதப்பொலிசாரும் மோப்ப நாய்களும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்பெயின் முக்கிய ரயில்வே அமைப்பு முறைகள் அமெரிக்காவினாலேயே நடத்தப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனால் அந்த அமைப்பு முறைகள் தற்போதைய குண்டு வெடிப்பினை அடுத்து கடும் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை கடந்த வியாழக்கிழமை மட்றிட்டில் இடம்பெற்ற ரயில் குண்டுத்தாக்குதலினால் நியூயோர்க்கில் இருந்து வாஷிங்டன் வரையிலும், சிக்காக்கோவில் இருந்து சென்பிரான்சிஸ்கோவரையிலும் அமெரிக்க ரயில் சேவைகளில் அதிகாரிகளின் அலட்சியப் போக்கு தற்போது கண்டனத்திற்குள்ளாகி உள்ளது.

இதேவேளை அண்மையில் ஸ்பெயினில் நடந்த குண்டுத் தாக்குதலின் பின்னணியில் அல்ஹைதா இருப்பதாக தாம் நம்புவதாக அமெரிக்க அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளில் இருந்து இஸ்லாமிய தீவிரவாதக் குழு மீது சந்தேகம் உள்ளதாக ஊடக அறிக்கைகளும் குறிப்பிட்டுள்ளன.



பாகிஸ்தானின் - கராச்சி நகரில் அமெரிக்க இல்லத்திற்கு முன்னால் வெடி மருந்தையும் இரண்டு வெடிக்க வைக்கும் கருவிகளையும் ஏற்றிச் சென்ற வாகனம் வெடிமருந்து மீட்கப்பட்ட நிலையில் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.


# பலஸ்தீனத்திலிருந்து பிரிந்துசெல்ல இஸ்ரேல் பாராளுமன்றம் அங்கீகாரம்

## -யூதக் குடியேற்றங்கள் வாபஸ்

(டெல்அவிவ்)

பலஸ்தீனத்திலிருந்து இஸ்ரேல் பிரிந்து செல்வதற்கு இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் மேற்கொண்ட திட்டத்திற்கு இஸ்ரேல் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பின் போது 46 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 45 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.புதிய திட்டத்திற்கு ஏற்ப பலஸ்தீனப் பகுதிகளிலிருந்து யூதக் குடியேற்றங்கள் விலக்கிக் கொள்ளப்படும். இந்த யூதக் குடியேற்றங்களை அங்கிருந்து அகற்றுவதற்கு எதிராக தீவிர வலதுசாரி, சமயக்கட்சிப் பிரதிநிதிகள் வாக்களிப்பைத் தவிர்த்துக் கொண்டுள்ளனர்.



மத்திய ஈராக் வீதி ஒன்றில் ரோந்து சுற்றும் அமெரிக்க படைச்சிப்பாய்.

# கொலின்பவல் நேற்று புதுடில்லி வருகை சமாதான நடவடிக்கைகளை நகர்த்த முயற்சி

## -திட்டமிட்டவாறு பாகிஸ்தான், ஆர்கானிற்கும் பயணம்

(புதுடில்லி)

அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் கொலின் பவல் நேற்று விஜயமொன்றை மேற்கொண்டு புதுடில்லிக்கு வந்துள்ளார்.

இந்தியா மற்றும்பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான சமாதானத்தை முன்னெடுக்கும் வகையில் இந்தியத்தலைவர்களுடனான பேச்சுவார்த்தைகளில் இவர் ஈடுபடவுள்ளார்.

கொலின்பவல் இந்தியப்பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சின்ஹா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஸ் மிஸ்ரா மற்றும் நிதி அமைச்சர் ஜஸ்வந்சிங் ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளார்.

இவர் தனது இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளமை தெரிந்ததே.

# பயங்கரவாதத்தை ஜெயலலிதா எவ்வகையில் தடுத்துள்ளார்?

## -வை.கோபால்சாமி கேள்வி

(சென்னை)

தமிழ் நாட்டில் பயங்கரவாதத்தை முதலமைச்சர் ஜெயலலிதா எந்த வகையில் கட்டுப் படுத்தி இருக்கிறார் என்பது குறித்து துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி விளக்கவேண்டுமென ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோபாலசாமி கோரியுள்ளார்.

உடுமலைப் பேட்டை அருகே நேற்று முன்தினம் இரவு தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்த அவர் அங்கு, தொடர்ந்து தனதுரையில் குறிப்பிடுகையில்: தேசிய சனநாயகக் கூட்டணியில் அங்கம் வகித்த போது சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்க வேண்டுமென்று தி.மு.க.வும் ம.தி.மு.க.வும் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

# 26 கைதிகள் விடுதலை

அமெரிக்காவின் குவாண்டனாமோ கடற்படைத் தளத்தில் இருந்து சில சிறைக் கைதிகளை அமெரிக்கா விடுதலை செய்துள்ளது. அமெரிக்காவினால் விடுவிக்கப்பட்ட இந்தக் கைதிகளில் 23பேர் ஆப்கானிஸ்தானுக்கும் மூன்றுபேர் பாகிஸ்தானுக்கும் அனுப்பப்பட்டுள்ளனர்.

இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு அமெரிக்கா ஆரம்பித்த பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையின் பின்னர் பயங்கரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் குவாண்டனாமோ கடற்படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை அமெரிக்காவின் குவாண்டனாமோ கடற்படைத் தளத்தில் இன்னமும் 600பேர் கைதிகளாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கடந்த வாரத்தில்...

## 08.03.2004 - 14.03.2004

**08** * மட்டு-திருமலை ஆயர் கிங்சிலி சுவாம் பிள்ளை தலைமையிலான குழுவினர் அரசியல்துறைப் பொறுப்பாளர், மட்டு அம்பாறை மாவட்டத் தளபதிகள் உள்ளிட்டோரை சந்தித்து மட்டக்களப்பு மாவட்ட நிலைமை குறித்து ஆராய்ந்தனர்.



ஆயர் குழுவுடன் சந்திப்பு

* சாவகச்சேரி-சங்கத்தானைப் பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார வாகனத்தை பொலிசார் தடுத்து நிறுத்தியதை எதிர்த்து பொதுமக்கள் மறியல்.

* ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியின் சட்ட ஆலோசகர் விஜயதாசரா ஜபக்ஸ லேக்ஹவுஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பதவியிலிருந்தும், ரூபவாஹினி கூட்டுத்தாபன அங்கத்துவப் பதவியில் இருந்தும் விலகியுள்ளார்.

* ஈராக்கின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடைக்கால அரச செயல் திட்டத்திற்கு இடைக்கால நிர்வாகக் கவுன்சில் அங்கீகாரம்.

* சர்வதேச மகளிர்தினம் தொடர்பான நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.



மகளிர்தின நிகழ்வில்

**09** * வன்முறைகள், குழப்பங்களற்ற வகையில் பொதுத் தேர்தலை நடத்துவது, கிழக்கு நிலவரம், வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஏற்படுத்துகின்ற அபிவிருத்தி தொடர்பாகவும், பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீபன் இவன்ஸ் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் கலந்துரையாடினார்.


* கியூபாவின் தீவான குவன்ரன்போவில் சிறைவைக்கப்பட்டிருந்த 5 பிரிட்டிஷ் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

* யாழ்.தீவகம் சுழிபுரம் பகுதியில் பெண் போராளிகளை இடுப்புப்பட்டியைக் கழற்றுமாறு கடற்படையினர் நெருக்குதல்.

* ஈராக்கிய மொசூலில் இடம்பெற்ற மோதலில் நான்கு பொலிசார் காயம்.

* இந்தியாவின் காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் மத்திய செய்தித்துறை அலுவலகத்தைத் தாக்கிய தீவிரவாதிகள் சுட்டுக் கொலை.

* சகீன்-II ஏவுகணைப் பரிசோதனையை பாகிஸ்தான் வெற்றிகரமாக பரீட்சித்தது..



சகீன்II

* 1985ல் இத்தாலியக் கப்பலான அச்சீஸ் லோரோ கடத்தல் சம்பவத்தில் சூத்திரதாரியான பலஸ்தீனத்தைச் சேர்ந்த அபூ அபாஸ் ஈராக்கில் அமெரிக்காவினால் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

* இந்திய நிர்வாகத்தில் அமைந்துள்ள காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகருக்கு அருகில் புட்கம் மாவட்டத்தில் பொதுமக்கள் மத்தியில் தீவிரவாதிகளினால் நடத்தப்பட்ட கிரனைட் தாக்குதலில் 4பொது மக்கள்பலி 50க்கு மேல்காயம்.

**10** * 15வருடகால இடைவெளிக்குப்பின் இந்தியக் கிரிக்கெட் அணி பாகிஸ்தானுடன் வரலாற்று முக்கியத்துவம் மிக்க விளையாட்டை ஆரம்பிக்கிறது.

* அரசியல், பொருளாதார, புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நிலைமைகளை நேரடியாக அறிவதற்காக நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சூல்கெய்ம் யாழ். விஜயம்.

* சிறிலங்காப் பொலிசார் முஸ்லிம்கள் மீதான தாக்குதல், ஆட் கடத்தல்கள் குறித்து முறைப்பாடு செய்தும் நடவடிக்கை எடுக்காதிருப்பதைக் கண்டித்து யாழ்.பொலிஸ் நிலையம் முன் சுமார் ஐநூறு முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்.

* நோர்வே விசேட தூதுவரை சந்தித்த யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி வன்னி மக்கள் வாக்களிப்பதற்கு நோர்வே ஒழுங்கு செய்து தர வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

* "இந்தியா ஒளிர்கிறது" என்ற பெயரில் கன்னியாகுமரியில் இருந்து அமிர்தசரஸ் வரை அத்வானி பாதயாத்திரையினை மேற்கொள்கிறார்.

* மேற்குக்கரை இஸ்ரேலில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 5பலஸ்தீனர்கள் பலி.

**11** * நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல்கெய்ம், தலைமையிலான குழுவினர் அரசியல்த்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ், விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன், மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோரைச் சந்தித்து மட்டு- அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள் தொடர்பாக கலந்துரையாடினர்.



எரிக்குடன் கலந்துரையாடல்

* இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜெக்குவர் எலியாஸ் தலைமையிலான குழுவினர் அரசியல்துறைப் பொறுப்பாளர், சமாதான செயலகப் பணிப்பாளர் ஆகியோரைச் சந்தித்து யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்தல் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல், பொதுத் தேர்தல் ஜேர்மன் நிதி உதவியுடனான அபிவிருத்தி ஆகியன தொடர்பாக கலந்துரையாடினர்.

* நோர்வே விசேட தூதுவர் தலைமையிலான குழுவினர் தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி தலைமையிலான குழுவினரைச் சந்தித்து வடக்குக் கிழக்கில் பெண்களுக்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற, மேற் கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும், அரசியலிலும் தேர்தலிலும் வடக்குக்கிழக்குப் பெண்களின் பங்களிப்புத் தொடர்பாகவும், சமாதான முயற்சிகளின் பின்னர் பெண்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து ஆராய்ந்தனர்.

* சமாதானம், ஊழல்களுக்கு எதிரான செயற்பாடுகள், இளைஞர்களை ஊக்கப்படுத்தும் வேலைத்திட்டம், வர்த்தகத்துறையினருக்கான ஊக்குவிப்பு, வேலைவாய்ப்பு போன்ற கொள்கைகள் அடங்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சனாதிபதி சந்திரிகா சமூகமளிக்காத நிலையில் வெளியிடப்பட்டது.

* ஸ்பெயினின் தலைநகரான மட்ரிட்டில் புகையிரத சேவை அமைப்பின் மீது ஒரே நேரத்தில் 10 குண்டுகள் வெடித்ததில் 180 பேர் பலி, 900க்கு மேற்பட்டோர் படுகாயம்.



குண்டுவெடிப்பின் கோரம்

* மட்டக்களப்பிற்கு விநியோகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகள் எரிக்கப்பட்டன.

*யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஸ்ரீபன் இவன்ஸ் தலைமையிலான குழுவினரும் அரச சார்பற்ற பிரதிநிதிகளும் கலந்துரையாடி யாழ்ப்பாண நிலவரத்தை மதிப்பீடு செய்தனர்.

* சு.ம.முன்னணியின் நான்காவது செய்தியாளர் மாநாட்டில் சனாதிபதிக்கும், கூட்டமைப்புக்கும் அவதூறு ஏற்படுத்தும் துண்டுப்பிரசுரங்கள் கண்டு பிடிக்கப்பட்டது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

* பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீபன் இவன்ஸ் தலைமையிலான உயர் மட்ட தூதுக்குழு யாழ் குடா நாட்டு இராணுவக்கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலாவைச் சந்தித்து போர் நிறுத்த உடன்பாடு, தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள், குடாநாட்டில் இராணுவத்தினரால் மேற கொள்ளப்படும் மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

**12** * நோர்வே சிறப்புத் தூதுவர் தலைமையிலான குழுவினர் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் தலைமையிலான குழுவினரைச் சந்தித்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட நெருக்கடியில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு, திருகோணமலை மாவட்ட பொருளாதார சமூக நிலவரம், தமிழ்-முஸ்லிம் உறவை வளர்த்தல் ஆகியன குறித்து கலந்துரையாடினர்.



திருமலையில்......

* வட பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் கருணாரட்ன, யாழ்மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி ஆனந்த செனவிரட்ன ஆகியோரைச் சந்தித்த யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மணிவண்ணன் ஆகியோர் பொதுத் தேர்தலில் மக்களின் மன உணர்வுகளைப் பாதிக்காத விதத்திலும் அவர்களின் உரிமைகளை பாதிக்காத விதத்திலும் பொலிஸார் செயற்பட வேண்டுமென வலியுறுத்தினர்.

* கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு மண்டபம் திறக்கப்பட்டது.

* இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்ட இந்தியா கண்டிப்பாக உதவ வேண்டும் என ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளை வை.கோ. கேட்டுக் கொண்டார்.

**13** * வடக்கு கிழக்கு மாகாண தெரிவத்தாட்சி அலுவலகர்கள் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவைச் சந்தித்து வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பது குறித்து ஆராய்ந்தனர்.

* கிளிநொச்சி ஏ-9 வீதியில் மாலை பயணிகள் பேருந்துடன் உந்துருளி மோதியதில் உந்துருளியில் பயணித்த இருவரும் பலியாகினர்.



ஏ-9ல் விபத்து

* பாக்தாத்தில் ஷியா முஸ்லிம்களின் பள்ளிவாசலில் குண்டு வெடிப்பு ஒருவரும் பாதிக்கப்படவில்லை.

**14** * இஸ்ரேலின் அஸ்ரா துறைமுகத்தில் நடத்தப்பட்ட இரு தற்கொலைத் குண்டுத் தாக்குதலில் 11 பொது மக்கள் பலி 20 பேர்படுகாயம்.

# சைவசமய பாடத்தில் கூடிய புள்ளி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை மாலை 2.30 மணியளவில் சைவ பாடத்தில் கூடிய புள்ளி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கலும் கௌரவிப்பும் திருநெறிக்கழக தலைவர் வே. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ப. அரியரத்தினமும் சிறப்பு விருந்தினராக கரைச்சி பிரதேச செயலர் பொன். நித்தியானந்தமும் கலந்து சிறப்பித்தனர். தரம் 12,13ம் வகுப்புக்களில் இந்து சமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி பெற்றவர்களுக்கான பதக்கங்களை ப.அரியரத்தினம் வழங்கிக் கௌரவித்தார்.

01).வி.அருணா தங்கப்பதக்கம் கிளி/வட்டக்கச்சி ம.வி

02).பா.கோமளா வெள்ளிப்பதக்கம் கிளி/வட்டக்கச்சி ம.வி

03).கு.பிரசாந்தி வெள்ளிப்பதக்கம் கிளி/வட்டக்கச்சி ம.வி

ஆகியோரும் தரம் 12ல் கௌரவ பரிசு பெற்றமாணவர்கள்

01).வி.மதிவதனி கிளி/இந்துக் கல்லூரி

02).செந்தர்சினா கிளி/இராமநாதபுரம் ம.வி

03).நா.பத்மப்பிரியா கிளி/இராமநாதபுரம் ம.வி

04).த.ஈஸ்வரன் கிளி/இராமநாதபுரம் ம.வி ஆகியோரும் பரிசுகளைப் பெற்றனர். இப்பரிசளிப்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சித்திபெற்ற அனைத்துப் பாடசாலை மாணவர்களும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (12)

# குருநாகல் பொதுச் சந்தையில் சனாதிபதி மரக்கறி கொள்வனவு

(கொழும்பு)


சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த 14ம் திகதி அவசரமாக குருநாகலுக்கு விஜயம் செய்துள்ளார். அவர் பொதுச் சந்தையில் நின்று பொதுமக்களைச் சந்தித்து உரையாடியதாகவும் பின்னர் மரக்கறிகளையும் கொள்வனவு செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. அன்று பி.ப.4.30 மணிக்கு அங்கு சென்ற சந்திரிகா அப்பிரதேச முன்னாள் எம்.பி.யும் முன்னணி ஐ.ம.சு.கூட்டணி வேட்பாளருமான ஜயரத்ன ஹேரத்தின் வீட்டுக்குச்சென்று ஒரு மணித்தியாலம் அங்கு செலவிட்டார். அப்போது மேற்படி எம்.பி.யின் வீட்டை வேட்பு மனுத்தாக்கல் செய்யும் தினத்தன்று தாக்கப்பட்டமை தொடர்பாக நடவடிக்கை எடுக்காதது பற்றி தொலைபேசி மூலம் வடமேல் மாகாண பொலிஸ்மா அதிபரிடம் தொடர்புகொண்டு விசாரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சிறிலங்காவின் அரசியல் போர் ஏப்பிரலுடன் முடியப்போவதில்லை!

உப்புல் ஜோசப் பர்ணாந்து (லங்காதீப)
மொழியாக்கம்–வடிவேல்

தற்போது உச்சக்கட்டத்துக்கு வந்துள்ள சிறிலங்காவின் அரசியல் போர் ஐ.தே.முன்னணிக்கோ, ஜே.வி.பி. சிறில.சுதந்திரக்கட்சி கூட்டணிக்கோ மக்களுக்கிடையிலானதோ அல்ல. இது சந்திரிகாவுக்கும், ரணிலுக்கும், விமல் வீரவன்சவுக்கும் இடையிலான முத்தரப்புப் போராகும். அது வரும் ஏப்ரல் 2ஆம் திகதியுடன் முடிவடையும் ஒன்றுமல்ல. அத்துடன் வடமேல் மாகாண சபைத் தேர்தல், அதன் பின்னர் நடைபெறவுள்ள ஏனைய மாகாணங்களுக்கான தேர்தல், அதனைத் தொடர்ந்து 2005ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தல் என்றவாறு தொடர்ந்து நடைபெறவுள்ள போராகவே இருக்கும். இந்தப் போர் இன்று நேற்று ஆரம்பமானதல்ல. அது 1994ஆம் ஆண்டிலிருந்து அதாவது இன்றைக்கு 10 வருடங்களுக்கு முன்பிருந்து மாகாணசபைத் தேர்தலுடன் ஆரம்பமானதாகும்.

சந்திரிகா கட்சித் தலைமைப்பொறுப்பை ஏற்றதுடன் மாகாணசபைத் தேர்தலுடன் ஆரம்பமான அந்தப்போரை சந்திரிகா ஒரு முடிவின் ஆரம்பம் என்று கூறினார். அவர் அவ்வாறு கூறியது ஐ.தே.கட்சியின் முடிவையே அது உண்மையாகவே அப்போது தெரிந்தது. தென்மாகாணசபைத் தேர்தலில்



அது வீழ்ச்சியுற்றது. அதன் பின்னர் 4மாதங்களில் பொதுத்தேர்தலிலும் அதனைத் தொடர்ந்து சனாதிபதித் தேர்தலிலும் அக்கட்சி படுபாதாளத்தில் விழுந்து முடிவுக்கு வந்தது.

அதன் பின்னர் சந்திரிகாவின் ஆட்சிக் காலம் ஆரம்பித்தது. அது ஆரம்பித்து 10 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில் 2005 ஆம் ஆண்டு- சனாதிபதித் தேர்தலுடன் அதுவும் முடிவுக்கு வரலாம். எனினும் அதனை முடிவுக்குக்கொண்டுவர சந்திரிகா விரும்பமாட்டார். 2005ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலை நிறுத்திவிட்டு தொடர்ந்து கதிரையில் இருப்பதே அவரின் ஆசை. அதன்மூலம் தமது கட்சித் தலைமையைத்தக்க வைத்துக் கொள்வது அவரின் திட்டம். இந்தத் திட்டம் சாதகமாயமைவதற்கு ஏப்ரல் 2ஆம் திகதி தேர்தலில் அவரது கூட்டணி வெற்றிபெற வேண்டும்.

1994ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் டி.பி.விஜயதுங்க தலைமையிலான ஐ.தே.க.தோல்வியுற அவரின் போர் முடிந்தது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட காமினி திசாநாயக்கவின் போரும் முடிவு பெற்றது. அதன் பிறகு கட்சியின் தலைமைப்பொறுப்பு ரணிலுக்கு வந்து சேர்ந்தது. அத்துடன் 2001ஆம் ஆண்டு அவர் பிரதமரானார். அப்போதிருந்த ரணில் 2005ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தல் களத்தில் போராட இலக்கு பார்த்துள்ளார்.

இது இவ்வாறிருக்க விஜேவீர உட்பட அமைப்பின் சகபாடிகளின் மறைவுக்குப் பின்னர் காணாமல் போயிருந்த ஜே.வி.பி. மீண்டும் அரசியற் போர் புரிய தொடங்கியது, 1994ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல் மூலமே அந்நேரத்தில் ஐ.தே.க.வின் வீழ்ச்சிக்கு ஜே.வி.பி. சந்திரிகாவுக்கு திரை மறைவில் ஆதரவளித்தது. எனினும் அத்தேர்தலில் வெற்றிபெற்ற சந்திரிகா ஜே.வி.பி.யை கவனிக்காது விட்டதால் ஜே.வி.பி. மீண்டும் சந்திரிகாவை விட்டு பிரிந்தது. பின்னரும் நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையை நீக்குவதாக உறுதியளித்ததன் பேரில் ஜே.வி.பி.சனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவுக்கு ஆதரவளித்தது. அந்த வாக்குறுதியை நிறைவேற்றாததையடுத்து மீண்டும் ஜே.வி.பி பிரிந்துசென்றுவிட்டது. ஆயினும் சந்திரிகா நாடெங்கிலும் தமது செல்வாக்கைப் பெற்றார். அதேபோன்று தென்னிலங்கையில் ஜே.வி.பி.யினரும் தமது செல்வாக்கை அதிகரித்துக்கொண்டனர். 1994ஆம் ஆண்டு ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரைக் கொண்டிருந்த ஜே.வி.பி. இன்று 16 உறுப்பினர்களைப் பெற்று பலம் பெற்றுள்ளது. அந்த பலத்துடன் முதலாளித்துவப் பிரஜைகள் எதிரில் சென்று தனது அரசியற்போருக்கான வியூகத்தை அமைத்துள்ளது. அன்று சந்திரிகா செய்தது போன்றே ஜே.வி.பி.யும் இன்று செய்கின்றது. ஜே.வி.பி. சந்திரிகாவுக்கு ஆதரவு வழங்குமாறு தன்னை இந்நாட்டில் ஒரு பிரதான அரசியல் கட்சியாக மாற்றும் நோக்குடனேயே அதன்மூலம் தேர்தலில் வென்றால் பிரதமராகவோ தோற்றால் எதிர்க் கட்சி ஆசனத்திலோ அமர்ந்து கொள்ளும் போரில் இறங்கியிருக்கின்றார். இந்த நோக்கம் 1994ஆம் ஆண்டிலேயே முளையிட்டது. ஆயினும் சிறில சுதந்திரக்கட்சிக்குள் அது உறுதியான இடத்தைப் பிடிக்க வேண்டும் என எண்ணியது. அதற்காகவே அது 1994ஆம் ஆண்டு சனாதிபதிக்கு வெற்றிவாய்ப்பை பெற்றுத்தந்தது. அந்தப் போராட்டத்தின் முடிவை ஆரம்பமாக்கிக்கொள்ளவிருப்பது சனாதிபதியின் அரசியல் ஆயுட்காலத்தை நீடிக்கச் செய்து 2005ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலை இரத்துச்செய்வதன் மூலம் ஜே.வி.பி.சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை தவிர்த்துக்கொள்ளலாம் எனக் கருதுகிறது. காரணம் அக்கட்சியில் அன்றும் எதிர் காலத்திலும் சனாதிபதி வேட்பாளர் ஒருவர் இல்லாதிருப்பதாகும். 1994,99ம் ஆண்டுகளில் அது சனாதிபதித் தேர்தலில் படு தோல்வியையும் சந்தித்தது 2005ம் ஆண்டிலும் இந்த நிலையே ஏற்படும் என்பது ஜே.வி.பி.யினருக்கு தெரியும். நிறைவேற்று அதிகார சனாதிபதி பதவி தமக்கு கிடைக்காது என்பதால் அது 2005ஆம் ஆண்டுத் தேர்தலை தடைசெய்துகொள்வது அவர்களுக்கு வசியமாகிறது. இது சந்திரிக்காவுக்கும் பொருந்தும் இருவரும் அதனாலேயே அச்சத்துடன் இருக்கின்றனர். ஆகவே இவரின் போராட்டமும் ஒன்றாகவே கருதப்படுகிறது.

ஆனால் சந்திரிகா வெற்றிபெற்றால்........ ஐ.தே.முன்னணி பிளவுபடும். பிளவுபட்டு சிலர் சந்திரிகாவின் ஆட்சியில் இணைவர். அதன் மூலம் பெரும்பாண்மை பலத்துடன் நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையை நீக்கலாம். அதன் மூலம் அரசியல் வாழ்வை நீடித்து 2005தேர்தலையும் தவிர்க்கலாம். அதேவேளை எதிர்வரும் மகாணசபைத் தோர்தலிலும் ஐ.தே.மு தோல்வி காணலாம்.

இந்தப் பேரில் ரணில்வெற்றிபெற்றால்? சந்திரிகா அரசியலில் இருந்து ஓய்வு பெற நேரிடும். மாகாணசபைத் தேர்தலிலும் ஐ.ம.சு. கூட்டணி படுதோல்வியடையும் இதனால் கூட்டணிக்குள் யார் எதிர்கட்சி தலமைப் பொறுப்பை ஏற்பது என்று போராட்டம் ஆரம்பிக்கும். இதன்போது கூட்டணி பிளவுபட்டு சிலர் ஐ.தே.முன்னணியில் இணையலாம். சந்திரிக்காவின் கூட்டணியில் 2005 ஆம் ஆண்டு நடைபெறும் சனாதிபதித் தேர்தலுக்கு வேட்பாளர் நியமனம் பிரச்சனைக்குள்ளாகும். அதனால் ரணில் போட்டியின்றி சனாதிபதியாக தெரிவாகலாம் ஜே.வி.பி.இடதுசாரிக் கட்சியாகி செயலிழந்து விடலாம். மாறாக ஐ.ம.சு.கட்சி தேர்தலில் வெற்றியடைந்து ஜே.வி.பி.யினருக்கு தனது 38 ஆசனங்களும் கிடைத்து விட்டால் ஜே.வி.பியினரின் விருப்பு ஏற்பவே அமைச்சரவை நியமனங்கள் நடைபெற நேரிடும். அதேவேளை தோல்வியடைந்தாலும் எதிர்கட்சித் தலைவர் தெரிவும் அவர்களின் விருப்புடனேயே நியமிக்க நேரிடும். சனாதிபதி வோட்பாளர் தெரிவும் அவ்வாறே மாகாணசபைகளின் முதலமைச்சர்கள் தெரிவும் அதே நிலைக்கே வரும்.

இந்த நிலை எதிர் மாறானால் ஜே.வி.பிக்குள்ளும் பிளவு ஏற்படலாம்.

1982 லும் இவ்வாறே நடந்தது. ஜே.வி.பியை சுற்றியிருந்த மக்கள் வெள்ளத்தைக் கண்டு அப்போதையத் தலைவர் ரோகண விஜேவீர சிறில.சுதந்திரக் கட்சியை துவம்சம் செய்துதமது கட்சி எதிர்க்கட்சியாக பரிணமிக்கும் என்று கனவு கண்டார். ஆயினும் அக்கட்சியடைந்த படுதோல்வியினால் அக்கட்சி எச்சரிக்கைக்குள்ளாக்கப்பட்டது. விஜே வீரவின் கனவும் கானல் நீரானது. அதே நிலை இன்றும் ஏற்படலாம். அதே போல மாகாண சபைத் தேர்தலும் நடைபெறலாம்.

இன்று ஏற்பட்டுள்ள போராட்டமும் சந்திரிக்காவுக்கும், ரணிலுக்கும் எவ்வளவு முக்கியமோ ஜே.வி.பி.யினருக்கும் இது ஒருமுக்கியமான தேர்தலாகும். இம்மூவரின் போராட்டமும் கழுத்தில் சயனைட்டைக் கட்டிக்கொண்டு போராடும் விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கு சமமானதாகும். இங்கும் தற்கொலைத் தாக்குதலை நடத்துபவராக சந்திரிகா திகழ்கிறார். காரணம் அவரே வலிய தேர் தலை தோற்றுவித் தார். 10 வருட அரசி யல் வாழ்வு காணாது என நினைத்து மேலும் அரசியல் வாழ்வை நீடிக்கும் நோக்கில் உள்ளார்.

இந்நாட்டின் தலைவர்கள் சிலர் இருமுறை பதவிக்கு வந்துள்ளனர். டி.எஸ். சேனநாயக்கவுக்கும் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவுக்கும் அந்த வாய்ப்பும் கிடைக்கவில்லை. 1951 முதல்53 வரையிலும் 1965 முதல் 70 வரையிலும் டட்லி சேனநாயக்க ஆட்சியில் இருந்தார். சிறிமாவோ அம்மையாரும் 1960முதல் 65 வரையிலும் 1970 முதல் 77 வரையிலும் ஆட்சிப்பீடத்தில் இருந்தார். அதன் பின்னர் 94 வரை எதிர்க்கட்சிப் பதவியில் இருந்தாலும் 94ம் ஆண்டுத் தேர்தலில் கட்சி வெற்றி பெறினினும் அவருக்கு எவ்வித பதவியும்கிடைக்கவில்லை. ஜே.ஆர். ஆட்சி பீடத்தில் இருந்ததும் 1977-82காலப் பகுதியிலும் 1982- 88 காலப்பகுதியிலும் ஆகும். ஆனால் பிறேமதாசா தனது முதலாவது ஆட்சிக் காலத்தைத் தானும் நிறைவு செய்ய முடியாதுவிட்டது.

சந்திரிகாவை பொறுத்தவரை 2005ம் ஆண்டளவில் அவர் இரண்டு முறை ஆட்சி நடத்தி முடிக்கவிருப்பினும் அது முடிவுக்குவரும் என்பது சந்தேகமே. 1999 ஆம் ஆண்டிலேயே அவர் அதனை தீர்மானித்துவிட்டார். காரணம் 99ம் ஆண்டு சனாதிபதித் தேர்தலின் பின்னர் நிறைவேற்று அதிகார முறையை நீக்கிவிட்டு பிரதமராக பதவிப் பிரமாணம் எடுக்கும் பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். ஐ.தே.கட்சியினரை பலிக்கடாவாக்கி தனது திட்டத்தை நிறைவேற்ற நினைத்தார். ஆனால் ஐ.தே.மு.வினர் இடமளிக்கவில்லை இதனால் 2000 ம் ஆண்டில் பாராளுமன்றத்தைக் கலைத்து 2001ம் ஆண்டு பொதுத்தேர்தலை அறிவித்தார். அப்போது அவர் அரசியலில் தன்னை நீடிக்க வைப்பதற்காக அரசியல் அமைப்பை மாற்ற சர்வசன வாக்கெடுப்பு நடத்த பல மில்லியன் ருபா செலவில் வாக்கு அட்டைகளும் தயாரிக்கப்பட்டது. பின்னர் அதனையும் நிறுத்திவிட்டார். பின்னர் ஜே.வி.பியுடன் கூட்டுசேர்ந்து அரசியலில் அரசஅமைப்பில் மாற்றங்கொண்டு வர முயன்றார். அதுவும் கைகூடாமல் போன போதே 2001ம் ஆண்டு பொதுத்தேர்தல் என்ற முடிவுக்கு வந்தார். அந்தத் தேர்தலிலும் அவர் தோல்வி உற்ற நிலையிலேயே தற்போது அரசமைப்பை மாற்றக் கூடியவாறான (கருத்துக்கணிப்பை) பொதுத்தேர்தல் ஒன்றை அறிவித்துள்ளார். அதற்காக அவர் செலவிட்டுள்ள நிதியும் பல மில்லியனாகும். அதன் மூலம் தனது அரசியல் ஆயுட்காலத்தை நீடித்தக்கொள்ள நினைக்கும் அவரின் போராட்டக்குணம் புலப்படுகிறது. இந்தப்பொதுத்தேர்தலில் பிரதம வேட்பாளர் ஒருவரை நியமிக்காததன் காரணமும் அவரே பிரதமராக வர எண்ணுவதாகவும் செய்திகள் கசிகின்றன. இந்தப்போரில் அவர் வெற்றி பெற்றால் அரண்மனை செல்வார் இல்லையேல் றோஸ்மீட் இல்லம் செல்வார். □

# தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு ஆதரவு யாழ். வெண்மை வா.ச.அறிவிப்பு

"சர்வதேச சமூகம், தமிழ் தேசியத்தின் அபிலாசைகளை கூர்ந்து கவனிக்கின்றது. தமிழ் மக்களின் சுயநிர்ணய வாழ்வுரிமைக்கான நியாயப்பாட்டை புரிந்து கொண்டு வருகின்றது. இதை நாமும் உறுதிப்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் கருத்தொருமைப் பாட்டின் அப்படையில் அதனை உறுதிப்படுத்தல் சர்வதேச சமூகத்தின் கண்ணோட்டத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தவல்லவை இம்மாற்றங்கள் எமது ஏக பிரதிநிதிகளாக வரித்து கொண்டுள்ள விடுதலைப்புலிகள் மீது சில நாடுகள் கொண்டுள்ள மாற்றுக் கருத்துக்களில் மாற்றங்களை கொண்டு வருவோம்" என யாழ். மாவட்ட வெண்மை வாணிப சங்கங்களின் ஒன்றியம் அறைகூவல் விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளை ஒன்றிணைந்து, ஒருமித்த குரலாக, கொள்கை ஈட்டி முனையாக விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமது ஆதரவை வழங்கப்போவதாகவும் அறிவித்துள்ளது.

அத்துடன் விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்று பெருமைப்படும் நமது ஒன்றியம் "எமது கடல் எமக்கு வேண்டும்! எமது விளை நிலம் எமக்கு வேண்டும்! எமது வீடு எமக்கு வேண்டும்" எனுங் கோசங்களையும் முன்வைத்துள்ளது. (27)

# இந்தியாவிலிருந்து 46 பேர் தாயகம் திரும்பினர்

நேற்று முன்தினம் அதிகாலையில் தென்னிந்தியாவில் இருந்து மேலும் 46 பேர் திரும்பியுள்ளார்கள். தென்னிந்தியா தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த நாகவதி அகதி முகாமில் இருந்தும் சிவகங்கை மாவட்டத்தில் இருந்தும் 46 பேர் இரண்டு சிறிய படகு மூலம் புறப்பட்டு தலைமன்னார் பியர் கரையை அடைந்தனர்.

இவர்களில் 19 ஆண்களும், 05 குழந்தைகளும், 21 பெண்களும் அடங்குவர். இவர்கள் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பூந்தோட்டம், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சிலாவத்துறை, கொக்குப் படையான் பேசாலை 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களும் கிளிநொச்சி ஜெயந்தி நகரைச் சேர்ந்தவர்களும் ஆவர். இவர்களை நேற்று கடற்படையினர் மன்னார் நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது அவர்களை மன்னார் நீதிபதி தத்தம் இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்க அப்பகுதி கிராம அலுவலர்களுக்கு உத்தரவு பிறப்பித்தார்.(மி)

# வட-கிழக்கு தமிழ்மக்களின் தாயகம் என்பதை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துவோம்

## திருமலை பல்கலை சமூகம் தெரிவிப்பு

(திருகோணமலை)

**தமிழ் பேசும் மக்கள் மிகவும்நிதானத்துடன் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய தேவையினைக் கொண்டுள்ளோம் வடக்கு-கிழக்கு தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம் என்பதை சர்வதேச சமூகத்திற்கும் பேரினவாத சக்திகளுக்கும் உணர்த்துவோம். இவ்வாறு திருமலை பல்கலைக்கழக சமூகம் தெரிவித்துள்ளது.**

திருகோணமலை மாவட்டப் பல்கலைக்கழக சமூகம் எதிர்வரும் ஏப்ரல் 02 பொதுத்தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைபபின் வெற்றிக்கான பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இதுதொடர்பாக திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக சமூகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுளளது. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

தமிழினவிடுதலைக்காய் வீழ்ந்து விதையாகிப்போன மாவீரர்களின் மரபில் தமிழினத்தின் விடுதலைககுத் தடம் அமைத்த தமிழீழத் தலைநகரின் தமிழ் மக்களாகிய நாம் 1978க்குப் பின்னர் இடம்பெற்ற பாராளுமன்றத்தேர்தல்களைப் புறக்கணித்தோம். 2001 ஆம் ஆண்டு தேர்தலின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாக சர்வதேச ரீதியில் ஏற்கச் செய்தோம். இன்று அதிலும் மேலாக தமிழ்பேசும் மக்கள் மிகவும் நிதானத்துடன் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய தேவையினைக் கொண்டுள்ளோம். வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம் என்பதைச் சர்வதேச சமூகத்திற்கும் பேரினவாத சக்திகளுக்கும் வெளிப்படுத்துவதன் மூலம் தமிழ பேசும் மக்களின் ஏகபிரதிநிதியான விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக எமது தாயகத்திலிருந்து ஆகக்கூடுதலான பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்றம் அனுப்ப வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எனவே நாம் தீர்க்கதரிசனத்துடன் செயற்பட்டு 100% வாக்களிப்பு இடம்பெறச் செய்ய வேண்டும். மற்றும் அளிக்கப்படும் வாக்குகள் நிராகரிக்கப்படாதவாறு பார்க்க வேண்டும். இவை காரண மாக பல்கலைக்கழக சமூகமும், பொது மக்களும் இணைந்து தமிழரசுக் கட்சியின் 'வீடு' சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்க உறுதிபூண வேண்டும் இதன் மூலம் எமது தாயகப்பிர தேசத்தில் சன்டையில்லாமல், இரத்தம் சிந்தாமல், உடைமைகளுககும் உயிர்களுக்கும் அநியாய இழப்பின்றி, இடம பெயர்வும் அவல வாழ்வும் இன்றி தமிழ்பேசும் மக்க ளின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு இத் தேர்தலை இறுதிச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்துவோம் என்று அறிககையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(25)

### எச்சரிக்கை

அரசியல் நடவடிக்கைகளில் பொலிசார் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் எப்பதவியை வகித்தாலும் அவர்களைப் பதவிநீக்கம் செய்ய நான் ஒரு போதும் தயங்கமாட்டேன். அவர்களைப் பாதுகாப்பதற்கு எவரும் முன்வரவேண்டாம்.

இவ்வாறு தென்மாகாணப் பிரதிப பொலிஸ்மா அதிபர் டீ.டபிள்யூ பிரதாபசிங்க தெரிவித்துள்ளார்.

# தீயால் அழிந்த உடைமைகளின் ஒரு பகுதி கையளிப்பு

வீடு தீப்பற்றி எரிந்ததால் ஏற்பட்ட உடமை இழப்பின் ஒரு பகுதியை உரியவர்களிடம் கையளிக்க நெடுங்கேணி புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனம் ஊடாக வவுனியா மாவட்டதமிழர் புனர் வாழ்வுக்கழகம் அனுப்பி வைத்துள்ளது.

கனகராயன் குளம் மெக்கன்றோ வீதியிலுள்ள ஐயாத்துரை கனகரத்தினத்தின் வீடு கடந்த 7ஆம் திகதி காலை 10.00 மணியளவில் அருகிலுள்ள குப்பைக்கு நெருப்பூட்டிய போது தற்செயலாக தீப்பற்றிக் கொண்டது. அதனால் வீட்டுப் பாவனைப் பொருட்கள், உடைகள், உணவுப் பொருட்கள், குடும்ப அட்டை, பங்கீட்டு அட்டை, பாடசாலை சீருடை கள், கல்வி உபகரணங்கள் அழிந்தன. இதனை நெடுங்கேணி புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனம் (NDRO) வவுனியா மாவட்ட தமிழர்புனர் வாழ்வுகழக (TRO) பணிப்பாளர் கவனத்திற்கு கொண்டு வந்ததால் அக்குடும்பத்திலுள்ள ஏழு பாடசாலை செலலும் மாணவர்களுக்கான பாடசாலை சீருடைகள்,பாடசாலை உபகரணங்களும் 11.03.2004 வவுனியா மாவட்ட TRO செயலகத்திலிருந்து NDRO நிறுவனத்திடம் கையளிககப்பட்டது.

-மன்னார் முள்ளிக்குளம் பகுதியில்-

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கத் திட்டம்

(மன்னார்)

அண்மையில் மன்னார் முள்ளிககுளம் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த 125 குடும்பங்களுக்கும் புதிதாக வீடுகளைக்கட்டி வழங்கும் திட்டம் நிக்கொட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படவுள்ளது. இதனை முன்னிட்டு நேற்று முன் தினம் முள்ளிக்குளம் ஆலய முன்றலில் ஒரு கலந்துரையாடல் இடம் பெற்றது. இக்கலந்துரையாடலில மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் மன்னார் அரசாங்க அதிபர் வி.விசுவலிங்கம், முள்ளிக்குளம் பங்குத் தந்தை அருள்திரு மாக்கிறட் மற்றும் பல உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதே வேளையில் அனைத்துக் கிராம மக்களும கலந்துகொண்டு தமது பிரச்சினையை அவர்களிடம் எடுத்துக் கூறினர். அதற்கு அவர்கள் இவர்களுக்கு உடனடியாக ஒரு லட்சம பெறுமதியான வீடுகளைக்கட்டுவதுடன் அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்வதாகவும் கூறினர். (மி)

# சுதந்திரக் கட்சியினருக்கு சேறுபூசும் வகையில் ஜே.வி.பி.யினர் பொதுத் தேர்தல் பிரச்சாரம்!

(கொழும்பு)

தேர்தல் பிரச்சாரங்களில் ஜே.வி.பி.யினர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மீது சேறுபூசும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து செயற்படுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் ஏற்கனவே கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை தெரிந்ததே.

இரத்தினபுரி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் ஜோன் செனவிரத்ன ஜே.வி.பி.யினரை வரவழைத்து இது சம்பந்தமாக கலந்துரையாடி உள்ளதாக ராவய தெரிவிக்கிறது.

ஆனாலும் ஜே.வி.பியினர் தமது கட்சியின் வேட்பாளர்களை ஆதரிக்கும் முகமாகவே தற்பொழுது தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

சரத் அமுனுகம, அமரசிறி, தொடங்கொட, டி.எம்.ஜயரத்தின, மைத்திரிபால சிறிசேன போன்ற சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மீது ஜே.வி.பி.யினர் எதிர்ப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றபடியால் இது கட்சிக்கு பெரும் பின்னடைவு என்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள சனாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.

# திலீபன் மருத்துவமனையில் சிறப்புற நடந்த நிறைவு விழா

(பூநகரி)

பூநகரி சாமிப்புலம் தியாக தீபம திலீபன் மருத்துவமனை யின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம பெற்றது.

பொதுச்சுடரினை அரச அதிபர் இராசநாயகமும் கிளி.மாவட்ட வெகுசன ஒன்றியத் தலைவர் பசுபதியும் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கினை நடமாடும் வைத்திய தேவான்ரி அவர்களும், பூநகரி பெரும்பாக உத்தியோகத்தர் சுந்தரமூர்த்தி அவர்களும் ஏற்றிவைத்தனர். அதனைத்தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் ஏற்றிவைத்தார். அகவணக்கத்தினைத் தொடர்ந்து ஈகச்சுடரினை திலீபன் மருத்துவமனை மன்னார் மாவட்ட பொறுப்பாளர் லோலோ ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து மலர் மாலையை பூநகரி பிரதேச செயலாளர் வைரமுத்து அணிவித்தார். வரவேற்பு உரையை பூநகரிப்பிர தேச தியாக தீபம் திலீபன் மருத்துவமனை நிர்வாகச்செயலாளர் ப.பாலசுபபிரமணியம் ஆற்றினார். அதனைத தொடர்ந்து தொண்டர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

அன்பளிப்பாக கிளி.மாவட்ட வெகுசன ஒன்றியத்தால் 50 பிளாஸ்ரிக் கதிரைகள் அன்பளிப்புச்செய்யப்பட்டன. சிறப்புரையை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர், அரச அதிபர், பிரதேசச் செயலாளர் வைரமுத்து, பெரும்பாக உத்தியோகத்தர் சுந்தரமூர்த்தி, பூநகரி ப.நோ.கூ.ச. தலைவர் கார்த்திகேசு ஆகியோர் நிகழ்த்தினர். பாராட்டுரையை கிராம சேவகர் அரியரத்தினம், பொ.தங்கராசா, முழங்காவில் அ/தி புனர் வாழ்வுக்கழகம் (தேசிய எழுச்சிப் பேரவை ஜெயபுரம்) பூநகரி மகா வித்தியாலய ஆசிரியர் விசுவாசம் ஆகியோர் ஆற்றினர் தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்றன. (34)

# சுகாதாரப் பணியாளர்,தொண்டர்களுக்கான வதிவிடப் பயிற்சிநெறி கிளி.யில் ஆரம்பம்



(அலுவலக செய்தியாளர்)

சுகாதார நிலையங்களில் பணி புரியும் பணியாளர்கள், மருத்துவத் தொண்டர்களுக்கான வதிவிடப் பயிற்சிநெறி நேற்று முன் தினம் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச்சங்க கேட்போர் கூடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் கா.கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் கிளி. மாவட்ட பிரதி மாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி தசத்தியமூர்த்தி, கிளி. மாவட்ட தமிழீழ சுகாதாரசேவைப் பொறுப்பாளர் திருமதி கலைமகள், கிளி.மாவட்ட செஞ்சிலுவைச்சங்க செயலர் ஆக்னேஸ் பொருளாளர், டாக்டர் கே.வி.கே. திருலோகமூர்த்தி, ஐ.சி.ஆர்.சி. வதிவிட பிரதிநிதி மற்றும மருத்துவர்கள் மட்டக்களப்பு இ.செ.சங்கத்தலைவர் வசந்தராசா, விரிவுரையாளர் ஜான், ஐ.சி.ஆர்.சி, மருத்துவ உத்தியோகத்தர், கிளி/முல்லை மாவட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கிளி,முல்லை, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 60 மருத்துவ தொண்டர்கள் இப்பயிற்சி நெறியில் கலந்துகொண்டுள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், கனேடிய செஞ்சிலுவைச்சங்கத்தின் அனுசரணையுடன், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தால் மேற்படி பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இப் பயிற்சிநெறியானது 6 மாத காலத்திற்கு நடைபெறவுள்ளதெனவும் தெரியவந்துள்ளது. (சோ)

# துணுக்காயில் தீவிரமான தேர்தல் பிரச்சார வேலைகள்

(துணுக்காய்)

துணுக்காய் பிரதேசத்தில் தேர்தல் பிரச்சாரவேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. யோகபுரம் மத்தி ஊரகவளர்ச்சி தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் மக்களைத் திரட்டி கருத்துக்களை வழங்குவதுடன் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு கோரி வருகின்றனர்.

இந்நிகழ்வு யோகபுரம் மத்தி கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் கிராமசேவையாளர் திருமதி மங்களேஸ்வரி கனகரத்தினம் தலைமையில் சனிக் கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெற்றது. கருத்துரைகளை கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை துணைச் செயலர் த. சுந்தரலிங்கம் மல்லாவி கனனிப் பயிற்சி நிலைய ஆசிரியர் குபேரன் ஆகியோர் வழங்கினர். இந்த நிகழ்வில் கிராமத்தில் உள்ள சமூக அமைப்புக்களின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (24)

### நியமனப்பத்திரம் வாபஸ் பெறப்பட்டது

ஜாதிக ஹெல உறுமயவின் ஹம்பகா மாவட்ட வேட்பாளர் அபர கேபஞ்சான தேரர் தமது நியமனப் பத்திரத்தை வாபஸ் பெறறுள்ளார்.

இது தொடர்பாக ஹம்பகா மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அனுப்பிய கடிதத்தில் ஜாதிக ஹெல உறுமயவின் செயற்பாடுகள் பௌத்த சம்பிரதாயத்திற்கு முற்றிலும் முரணானதாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.






**சிந்தனைக்கு**

எதிரியைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 17-03-2004

## எவ்வளவு காலத்திற்கு....!

தமிழ்த் தேசியத்திற்கு எதிராகவும் - தமிழீழ தேசியத் தலைமைக்கு எதிராகவும் கருணாவினால் எவ்வளவு காலத்துக்கு தாக் குப்பிடிக்க முடியும் என்பதே இன்றுள்ள கேள்வியாகும். அதாவது கருணா நினைத்தது போன்று பிரதேசவாதத்தினைக் கிளறி அதில் குளிர் காயலாம் என்பது நீண்ட காலத்திற்கு சாத்தியப்பாடான தொன்றல்ல.

தமிழ்த்தேசியம் என்பது இன்று நேற்றானதொரு விடயமல்ல. இலங்கைத் தமிழ் மக்களின் வரலாற்றுக் காலத்தில் இருந்தே இது உருப்பெற்று வளர்ந்து வந்த தொன்று. அதன் பின்னர் அன்னியர் காலணியாதிக்க காலத்தில் அது முடிவும் பெறத்தொடங்கியிருந்தது.

அதன் பின் தமிழீழ விடுதலைப்போராட்டம் முனைப்புப்பெறத் தொடங்கியபோது மேலும் அது தீவிரம் பெற்றதாக வளர்ச்சிகண்டது. அதாவது தாயகத்திற்கான விடுதலைப்போரில் பிராந்தியம், சாதி, சமயம், என்பனவெல்லாம் மறக்கப்பட்டவையாகின. தேசியத் தலைமை உருப்பெற்று அனைவரையும் ஒருங்கிணைத்து எந்தவித வேறுபாடும் இன்றி வழிநடத்திச் சென்றது.

கருணா ஒரு கட்டளைத் தளபதி யுத்த முனையில் செயற்பட்டமை; இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தையில் முக்கியஸ்தராகப் பங்கேற்றமை என்பன எல்லாம் பிரதேசவாதம் வேறு பிரிவினைகள் என்பனவற்றை எல்லாமே தமிழ் மக்கள் இடையிலான முரண்பாடுகள் யாவற்றையும் கடந்ததன் வெளிப்பாடே ஆகும். இதில் போராளிகள் மட்டுமல்ல, மக்கள் அனைவரும் தெளிவு பட்டவர்களாகவே இருந்தனர்.

இந்நிலையில்தான் கருணா பிரதேசவாதம் என்பதைக் கிளறி தமிழ் மக்களுக்குள்ளும், போராளிகளுக்குள்ளும் இடையில் முரண் பாட்டைத் தோற்றுவிக்க முற்பட்டுள்ளார். இதன் மூலம் தனது தனிப்பட்ட அபிலாசைகளை நிறைவு செய்து கொள்ளவும், தனது தவறுகள், குற்றச்செயல்கள் என்பனவற்றை மூடிமறைத்துவிடவும் பார்க்கின்றார். இதனால் தேவையற்ற பதற்றம் உருவாக்கப்பட்டது.

ஆனால், தற்பொழுது சூழ்நிலை படிப்படியாக மாற்றம் காணத் தொடங்கிவருகின்றது. அதாவது, கருணா தனித்தியங்கப் போவதாக அறிவிப்புச் செய்தபோது இருந்த நிலைமை தற்பொழுது இல்லை. அதாவது, கருணாவின் நடவடிக்கை குறித்து விமர் சனங்களும் கண்டனங்களும் எழத் தொடங்கியுள்ளன. அதேவேளை, மட்டு. அம்பாறை மாவட்டங்களில் தமிழீழத் தேசியத் தலைமை மீது நம்பிக்கையை வெளிப்படுத்தும் நிகழ்வுகளும் இடம்பெற ஆரம்பித்துள்ளன.

கருணா தான் தனித்தியங்கப்போவதாகத் தனது தீர்மானத்தை வெளியிட்டபோது அவரை எதிர்த்து பெரும்பாலான தளபதிகள், பொறுப்பாளர்கள் வன்னி வந்து சேர்ந்தனர். வெளியேற வாய்ப் பிருந்த போராளிகளும் வெளியேறிவிட்டனர். இந்நிலையில், தற் பொழுது படிப்படியாக மக்களினாலும் கருணாவின் நடவடிக் கைக்குக் கண்டனங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

முதல் முதலில் மட்டு. ஆரையம்பதியில் ஷகருணா துரோகி; என ஒட்டப்பட்ட சுவரொட்டியில் இருந்து தற்பொழுது கருணா கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஷபாடும் மீன்; இணையத் தளத்தின் செய்தியாளரான போராளி இவ் இணையத் தளத்தின் ஊடாக வெளிவந்த தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கும், தமிழீழத் தேசியத் தலைமைக்கும் எதிரான கருத்துக்களுக்கு மன்னிப்புக் கோரிக் கடிதம் ஒன்றை வெளியிட்டுவிட்டு வெளியேறியுள்ளார்.

இதேவேளை, மட்டக்களப்பு வர்த்தகர்களைச் சந்திப்பதற்கு கருணா மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்த நிலையில் கூட்டம் கருணாவினால் ரத்துச் செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அதாவது, குறுகிய பிரதேசவாதத்திற்கு நிதி அளிக்க முடியாது என்ற ரீதியில் வர்த்தகர்கள் கொண்டிருந்த நிலைப்பாடே கருணா கூட்டத்தை ரத்துச் செய்யக் காரணமாகியது.

இதனைத் தவிர தமிழர் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடும் மட்டு. அம்பாறை வேட்பாளர்களில் சிரேஷ்ட வேட்பாளர்கள் தமிழ்த் தேசியம் என்பது குறித்து பேசுதல் கூடாது என்ற கருணாவின் நிபந்தனையை ஏற்பதற்கு தயாராக இல்லை என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன. மேலும் பெரும்பாலான புத்தி ஜீவிகள் மட்டத் திலும் கருணாவின் பிரதேசவாதம் கவலை ஏற்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில்தான், கருணா எவ்வளவு காலத்திற்கு தாக்குப் பிடிப்பார் - அவரது பிரதேசவாதம் தமிழ்த் தேசியத்தின் முன்னால் எவ்வளவு காலத்திற்கு நின்று பிடிக்கும் என்ற கேள்விகள் தற்பொழுதே எழத் தொடங்கியுள்ளது. இதேவேளை, கருணாவின் பின்னால் இருந்து இப்பிரிவினைக்கு வித்திட்டவர்கள் யாராக இருப்பினும் அவர்களினாலும் கருணாவை எவ்வளவு காலத்திற்கு தக்கவைத்துக் கொள்ள முடியும் என்பதும் கேள்விக் குரியதே. ஏனெனில், கருணாவின் துரோகத்தனத்தையும், தமிழ்த் தேசியத்திற்கு அவர் இழைத்த அநீதிகளையும் மக்கள் பூரணமாக உணரத் தொடங்கியதும் கருணாவை எவராலுமே காப்பாற்ற முடியாது போய்விடும் என்பது நிச்சயம். இந்த வகையில் வளர்ச்சி காணும் சூழ்நிலையில் கருணாவினால் நீண்ட நாட்கள் தாக்குப் பிடிக்க முடியாதுபோவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

# சமாதானம் நிரந்தரமானால் அரசியல் வாழ்வு அஸ்தமிக்குமென சனாதிபதி அஞ்சுகிறார்

## -பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

இடைக்கால நிர்வாகம் தொடர்பாகவோடோக்கியோ வெளிப்பாடுகள தொடர்பாகவோ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளிப்படுத்தவில்லை. தெளிவான கொள்கையொன்றை வெளிப்படுத்தாமல் அம் முன்னணி எவ்வாறுசமாதானததிட்டத்தை முனனெடுத்துசசெல்லும் என பிரதமர் ரணில்வினாவெழுப்பியுள்ளார்.

அம்பாறைநகரில் நடைபெற்ற பிரச்சாரக்கூட்டம்ஒன்றில்உரையாற்றியஅவர் மேலும் கூறியதானது;

வடகிழக்கு பிரதேசங்களில் மட்டுமன்றி முழு நாட்டுக்கும் அசசுறுத்தலாகஇருந்துதொடர்ந்த யுத்தத்தை நிறுத்தி சமாதானம் ஏற்பட மக்களிடம் நாம் சென்ற முறை ஆணைகேட்டோம் அதனபடிஆட்சிக்கு வந்து 2 வருடகால மாக சமாதானத்தை ஏற்படுத்தி அனைத்து இனமக்களும் பயமின்றி பாதுகாப்புடன் வாழவழிபிறந்தது. இந்த சமாதானத் திட்டம் நிரந்தரமானதாகினால் தமது அரசியல் வாழ்வு அஸ்தமித்து விடும் என்றுஅஞ்சிய ஜே.வி.பியும் சந்திரிகாவும் நாட்டை விடுதலைப்புலிகளுக்கு அர்ப்பணித்து விட்டதாக கூக் குரலிட்டனர். அதன்பயனாகவே கடந்த நவம்பர் மாதம்நாட்டில் அரசியலில் பூகம்பம் தோன்றியது.

நாம்ஆட்சிக்கு வந்தால் சமாதானத்தைத்தொடர்ந்து முன்னெடுப்போம் வெளி நாடுகள் ஒப்புக்கொண்ட நன் கொடைகள் கடனுதவிகளைப் பெற்று நாட்டை அபிவிருத்தி செயவோம் பொருளாதாரத்தை முன்னேற்றுவோம் எனக் கூறினார்.

# ஆசிரியர்கள் பிரச்சினைக்கு தீர்வு கோரி 10,000 ஆசிரியர்கள் இன்று சத்தியாக்கிரகம்!

(கொழும்பு)

ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுமார் 10 ஆயிரம் ஆசிரியர்கள் இன்று சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளார்கள்.

இன்று புதன்கிழமை கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பிக்க கல்விசார் ஊழியர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இது வரை மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் பலன் அளிக்காத நிலையிலேயே இச்சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக மேற்படிச் சங்கத்தின் தலைவர் முறுத்தட்டுவே ஆனந்ததேரர் கூறியுள்ளார்.

பி.சி.பெரேரா சம்பள முரண்பாட்டைத் தீர்த்தல், முதலாம்தர ஆசிரியர் பதவி உயர்வு பெறத் தகுதியானவர்களுக்கு வயது வரையறையின்றி வாய்ப்பு வழங்கல், தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கல், ஆசிரியர் சேவை நிலையியற் குழுவின் முடிவுகளை அமுல்ப்படுத்தல் ஆகிய கோரிக்கைகளையே முன்வைத்து சத்தியாக்கிரகப் போராட்டம் தொடரப்படவுள்ளது.

பி.சி.பெரேரா சம்பள முரண்பாட்டை நீக்குவதன் மூலம் ஆசிரியர் சேவையில் தரம் ஒன்றிற்கான ஆசிரியர்களுக்கு 5130 ரூபா, தரம் இரண்டிற்கான ஆசிரியர்களுக்கு 4010 ரூபா, தரம் மூன்றிற்கான ஆசிரியர்களுக்கு 2525 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும். என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### இறுதிச்சந்திப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலன்று ஏற்படக் கூடிய தேர்தல் வன்செயல்கள் மற்றும் எழக்கூடிய பிரச்சினைகள் தொடர்பாக ஆராயவென 22 மாவட்டங்களைச் சேர்ந்த உதவி தேர்தல் ஆணையாளர்களை தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க அழைத்துள்ளார் இந்தச் சந்திப்பு நாளை நடைபெறும்.தேர்தல் தினத்திற்கு முன்பாக நடைபெறும் இச் சந்திப்பு இறுதியானதாக இருக்கும்.

# நிறைவேற்று அதிகார சனாதிபதி முறை; பிரதமரின் கருத்தறிய ஐ.ம.சு.மு. ஆவல்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை ஒழிப்பது தொடர்பாக பிரதமர் கொண்டிருக்கும் கருத்தை அவர் வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கேட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடக மகாநாட்டில் இந்தக் கோரிக்கையை முன்னணியின் முக்கியஸ்தரான தினேஸ் குணவர்த்தன விடுத்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் நிறைவேற்று சனாதிபதி முறையை ஒழிக்கும் விடயத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தமது தெளிவான விளக்கத்தை தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிட்டிருப்பதாக தெரிவித்தார்.

முன்னணியின் செயலர் சுசில் பிரேம் ஜெயந்த் தமது கருத்தில் தேர்தல் விஞ்ஞாபனத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் முன்னணி தமது தேர்தல் விஞ்ஞா பனத்தை தழுவியே ஐக்கிய தேசிய விஞ்ஞாபனத்தை தயாரித்துள்ளதாகக் குறிப்பிட்டார். (32)

# எஸ்.பி.க்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய நீதியரசர் வற்புறுத்து!

அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு எதிராக குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யுமாறு தலைமை நீதியரசர் சரத் என் சில்வா, சட்டமா அதிபரைக் கேட்டுள்ளார்.

கலிகஹஅத்துவ பகுதியில், அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூட்டம் ஒன்றில் கடந்த நவம்பர் 3ம் திகதி உரையாற்றும் போது, உயர்நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் பேசியதாக உவைப்படுன என்ற இடத்தில் வசிக்கும் மூவர்வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்குத்தொடர்பில் ஏற்கனவே எஸ்.பி. திஸாநாயக்காவின் உரை அடங்கிய ஒலி, ஒளி நாடாவை, உயர் நீதிமன்ற நீதியரசர்களில் 9 பேர் பார்த்து அவர்கள், அமைச்சர் உயர் நீதிமன்றத்தை அவமதிப்பதாகவே தமது கருத்தை தெரிவித்திருந்தனர். இந்த நிலையில், தலைமை நீதியரசர், சட்டமா அதிபரிடம்கள் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யுமாறு கேட்டுள்ளார். இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தாம் நீதிமன்றத்தை அவமதிக்கவில்லை என்பதற்கான விளக்கத்தை அளிப்பதற்கு எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு அழைப்பாணை விடுக்கப்படும்.

# இந்தியா-பாகிஸ்தான் 2வது போட்டியில் பாதுகாப்பு பன்மடங்கு அதிகரிப்பு

இந்திய-பாகிஸ்தான் இடையே நேற்று ராவல்பிண்டியில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டிக்கான பாதுகாப்பு நேற்று பல மடங்காக அதிகரிக்கப்பட்டிருந்தது.

முதலாவது போட்டி நடத்தப்பட்ட மைதானத்திற்கு அருகில் வெடிகுண்டுடனான வாகனம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதையடுத்தே நேற்றைய போட்டி பல மடங்காக பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது.

இந்திய பாகிஸ்தான் இடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளை குழப்புவதற்காகவே இவ் வாறு சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக கருதப்படுகிறது. போட்டி மைதானம், வீரர்கள் தங்கியுள்ள விடுதி என்பனவும், மைதானம் அருகே அமைந்துள்ள வீதிகள் என்பனவும் 24 மணிநேரம் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

உயரமான கட்டடங்களில் நவீன ரக ஆயுதங்களுடன் பாதுகாப்பும் படைவீரர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர்.

மைதானம் அமைந்துள்ள பகுதியில் உலங்கு வானூர்தி ரோந்து நடவடிக்கைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# கூட்டமைப்பின் ஆதரவின்றி எக்கட்சியும் ஆட்சியமைக்க முடியாதென நிரூபிக்க வேண்டும்

## கட்டைபறிச்சானில் சம்பந்தன் கோரிக்கை

(திருகோணமலை)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவின்றி எந்தப் பிரதான சிங்கள அரசியல் கட்சியாலும் அரசாங்கம் அமைக்க முடியாது என்பதை தமிழ் மக்கள் எதிர் வரும் ஏப்ரல் 2 பொதுத் தேர்தலில் ஐயத்துக் கிட மின்றி நிரூபிக்க வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா. சம்பந்தன் கட்டை பறிச்சானில் நடத்தப்பட்ட கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

ஆரம்பத்தில் கூட்டமைப்பு வேட்பாளர்களான சம்பந்தன், க. துரைரெட்ணசிங்கம், எஸ். கௌரி முகுந்தன், சதா. சண்முகநாதன் ஆகியோர் ஊர் மக்களால் ஊர்வலமாக கூட்டம் நடைபெற்ற இடத் திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். வேட்பாளரும் முன்னைநாள் எம்.பி.யுமான க. துரைரெட்ணசிங்கம் பேசும்போது, தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணுவதற்கான பாலமாக விடு தலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன் னாட்சி அதிகார சபை முன்மொழிவு அமையப் போகிறது. அம்முன்மொழிவுக்குப் பின்னால் தமிழ் மக்கள் ஏகோபித்து நிற்கின்றார்கள் என்பதை சிங் கள அரசுகளுக்கும் சர்வதேசத்துக்கும் பகிரங்கமாக எடுத்துரைப்பதாக தேர்தல் முடிவு அமைய வேண்டும் என்று தெரிவித்தார். வேட்பாளர் கௌரி முகுந்தன் பேசுகையில், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் பின்னால் உறுதியாக நிற்கின்றார்கள் என்பதை எதிர்வரும் பொதுத் தேர்தல் முடிவுகள் வெளிப் படுத்த வேண்டும் என்று கூறினார். வேட்பாளர் சதா. சண்முகநாதன் பேசுகையில், தமிழ் மக்கள் தங் களது உரிமைகளைப் பெறும் போராட்டத்தில் விடு தலைப்புலிகளுடன் இணைந்தே செயற்படுகின்றார் கள் இதனை மீண்டும் வலியுறுத்துவதாக தேர்தல் முடிவு கள் அமைய வேண்டும் என்று தெரிவித்தார். (25)

# ஓமந்தையில் கிணற்றிலிருந்து ஆயுதங்கள், வெடிமருந்துகள் மீட்பு

(செட்டிகுளம்)

வவுனியா ஓமந்தை பகுதியில் இராணுவத்தால் கைவிட்டு செல்லப்பட்டுள்ள ஒருதொகுதி வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. கிணறு ஒன்றினுள் ஆயுதங்களும், வெடிபொருட்களும் இருப்பதைக்கண்ட பொதுமக்கள் இப்பகுதியில் வெடிபொருட்களை அகற்றிவரும் எவ்.எஸ்.டி நிறுவனத்தினரிடம் முறையிடப்பட் டுள்ளனர். இந்த வெடிபொருட்களினை தற்போது எவ்.எஸ்.டி மீட்டு வருவதாகவும் மீட்ட இந்த பொருட்களினை இன்று ஓமந்தைப் பகுதி யில் வைத்து பத்திரிகையாளர்களுக்கு காண்பிக்க இருப்பதாக எவ்.எஸ்.டி. நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் பாலா தெரி வித்தார். (21)

# இரண்டாவது ஒருநாள் போட்டி; பாகிஸ்தான் அணி வெற்றி

இந்திய பாகிஸ்தான் அணி களுக்கிடையேயான இரண்டா வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி யில் பாகிஸ்தான் அணி 12 ஓட டங்களால் வெற்றி பெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி 50 ஓவர் முடி வில் 329 ஓட்டங் களைப் பெற்றது.

பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய இந்திய அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 317 ஓட்டங்களை மட்டுமே பெற் றது. சச்சின்டெண்டுல்கர் 141 ஓட டங்களைப் பெற்றார்.

# ஈ.பி.டி.பி.சங்கரியின் பிரச்சாரத்திற்கு இராணுவம் உதவி உடன்நிறுத்த தமிழ்க்கூட்டமைப்பு வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தேசவிரோத சக்திகளுக்கு ஆதரவாக இராணுவத்தினர் மேற் கொள்கின்ற பிரச்சார நடவடிக் கைகள் உடனடியாக நிறுத்தப் படவேண்டுமென தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட் பாளர்கள் யாழ். மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களிடமும், யாழ் உதவித்தேர்தல் ஆணையாள ரிடமும் வலியுறுத்தியுள்ளனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர் தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டி யிடும் கட்சிகள்,மற்றும் சுயேட்சை குழு உறுப்பினர்கள் ஆகியோர் நேற்று யாழ்.மாவட்ட தெரிவத் தாட்சி அலுவலர் பத்மநாதன மற்றும் உதவி தேர்தல் ஆணை யாளர் நடராஜா ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினர்.

எதிர்வரும் தேர்தலில் வேட் பாளர்கள் கடைப்பிடிக்க வேண் டிய ஒழுக்க விதிநடைமுறைகள் மற்றும் மக்களின் உரிமைகளை பாதிக்காதவாறு பிரச்சாரம் போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டன. அத்துடன் கட்சிகள் கடைப்பிக்க வேண்டிய முக்கிமான பலவிட யங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றியும் ஆராய்ந்தனர்.

இதேவேளை யாழ்.மாவட்ட மக்களை அச்சுறுத்தும் வகையில் ஈ.பி.டி.பி. மற்றும் ஆனந்தசங் கரியின் சுயேட்சைகுழு என்பன பிரச்சார நடவடிக்கைகளில் ஈடு பட்டு வருகின்றனர் இவர்களுக்கு சார்பாக துண்டுபிரசுரங்களையும், ஒலிபெருக்கி மூலமான அறிவித் தல் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டுவருகின்றனர். இந்நடவ டிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமெனவும், இதற்குரியநட வடிக்கைகளை தெரிவத்தாட்சி அலு வலகம் மற்றும் தேர்தல் திணைக் களம் மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கைவிடுத்தனர் இதனைத தொடர்ந்து இவ்விடயம் சம்பந்தமாக படையினருடன் உடனடியாக பேச்சு வார்த்தை நடத்து வதாக யாழ் தேர் தல்அதிகாரிகள்தெரிவித்துள்ளார்.(33)

### ஐ.பாராளு...

பின்போது, ஐரோப்பிய பாராளு மன்றத்தின் இலங்கைக்கான அதி காரியும் பங்குபற்றினார்.

யுத்த சூயப்பிரதேசத்தில் அமைக்கப்படும் கொத்தணி வாக் களிப்பு நிலையங்களில் படை யினரின் கெடுபிடி, சோதனைக ளின்றி வாக்காளர்கள் தங்களின் வாக்குகளை அளிப்பதற்கான ஒழுங்குகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் மேற்கொள்ளவேண்டும் என்றும் சம்பந்தன் தெரிவித்தார். சூனியப்பிரதேசத்தில் அமைக் கப்படும் கொத்தணிவாக்களிப்பு நிலையங்களுக்கு பொலிசார் பாதுகாப்பு வழங்குவதற்கு விடு தலைப்புலிகள் எதிர்ப்புத்தெரி விக்கவில்லை என்பது ஐரோப்பிய பாராளுமன்ற தேர்தல் அவதானிப் புக்குழுவின் பிரதிநிதி குஸ் நாகனின் கவனத்துக்கொண்டு வரப்பட்டது. அதற்கு குஸ் நாகன் இப்போதுதான் முதலாவ தாக விடுதலைப்புலிகளின் இந்த நிலைப்பாடு பற்றித்தான் கேள் விப்படுவதாகவும் இதுவிடயமாக தேர்தல்ஆணையாளருடன் பேசுவ தாகவும் தெரிவித்தார். தேர்தல் ஆணையாளர் தயானந்த திசா நாயக்கவை குஸ்நாகன் நேற்று செவ்வாய்க்கிழமை சந்தித்து பேசு வதாக இருந்தது. (25)

### ஜே.வி.பி....

கிகள் - 04, எம். ஜி. ஐ.ஏ. 3 ரகத் துப்பாக்கி - 01, கைத்துப் பாக்கிகள் - 02, உட்பட 222 ஆயு தங்கள் மக்கள் விடுதலை முன் னணியிடம் இருப்பதாக அமைச் சர் ராஜித சேனாரட்ன தெரி வித்தார்.

இதனைவிட ரிவோல்வர், றைபிள்கள் 402 உம், சுழல் துப் பாக்கிகள் 515உம் மக்கள் விடு தலை முன்னணியிடம் தொடர்ந் தும் இருப்பதாக ராஜிதசேனா ரட்ண தெரிவித்தார். மக்கள் விடு தலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தான் குற் றச்சாட்டுகள் எதுவும் சுமத்தப் படாத ஒருவர் எனக்கூறிவருவதாகக் குறிப்பிட்ட அமைச்சர் சோம வன்ச அமரசிங்கவே நந்தன மாரிசிங்க என்பவரை கொலை செய்ததாக திருமதி றோகண விஜயவீர குறிப் பிட்டதாக தெரிவித்திருந்தார். தாமும் கீர்த்தி விஜயபாகு, பியசிறி பெர்னாண்டோ போன்றவர்களின் கொள்ளையடித்த சுமார் 30 வங்கிகளின் நகைகளை ஏனைய வர்களுக்குத் தெரியாமல் சோம வன்ச அமரசிங்க கையாடியுள் ளார். இதனை வெளிக்கொணர்ந் ததன் காரணமாகவே சூரியதாச என்ற மக்கள் விடுதலை முன் னணி உறுப்பினரை சோமவன்ச கொலை செய்தார் என அவர் மேலும் கூறியுள்ளார். (32)

### தனது...

தாக கூறியே இவர்கள் அங்கு நிற் கின்றனர். உங்கள் பிள்ளைகளை இதற்காகவா? ஒப்படைத் தீர்கள். தலைவர் படத்திற்கு முன் திலக மிட்டு வழிஅனுப்பினீர்கள்.

மட்டு. அம்பாறை மண்ணை மீட்டெடுக்கத்தானே பிள்ளைகளை அனுப்பினீர்கள். தேசியத் தலை வரின் காலத்தில் தமிழீழம் பெறு வோம் என்று கூறி அழைத்தவர் கள் இன்று தனது சுய நலனுக்காக சிங்கள இராணுவத்துடன் சேர்ந்து கொண்டுஉங்கள் பிள்ளைகளைப் பலிக்கடாவாக்க அனுமதிக்காதீர்கள்.

இன்றே விழிப்படையுங்கள். விரையுங்கள். உங்கள் பிள்ளை களை வீடுகளுக்கு அழைத்துச் செல்லுங்கள். உரிமைப் போர் என் றால் அனைவரும் பங்கெடுப்போம்.

பொய்ப் பிரச்சாரம் கூறுபவர் களை ஓரம் கட்டுங்கள் தலை வரின் படங்களை தந்தவர்களே அவரின் படத்தை எரித்தும், கிழித் தும் திரிகின்றனர். சகோதரப் போர் ஒன்றின் மூலம் உங்கள் பிள்ளைகளை வீணே இழந்துவிட வேண்டாம். அவற்றிற்கு அனும தியாதீர்கள். வாகரைக்குச் சென்று உங்கள் பிள்ளைகளை கேளுங்கள்.

தமிழீழ விடுதலைக்கு வீட் டுக்கு ஒருவராகச் சென்றவர் களை வீணாக சாக அனுமதிக் காதீர்கள். சகோதரச் சண்டையில் ஈடுபடப்போவது கருணாவினதோ, அவரின் தம்பி றெஜியினதோ பிள்ளை கள் அல்ல. உங்கள் பிள்ளை கள். உரிமையோடு சொல்லுகின் றோம் உடன் சென்று உங்கள் பிள் ளைகளை மீட்டெடுங்கள். விரை வாக சிந்தித்துச் செயற்படுங்கள்.

அழிவுகள் மீண்டும் வேண் டாம், உறவுகளுக்குள் ஓர் போர் வேண்டாம். ஒன்றுபடுங்கள், பிரதேச வாதம் எமக்கு வேண்டாம், தமிழீழம் தான் எமக்கு வேண்டும். உரத்துக் குரல் கொடுங்கள். வாகரையிலுள்ள உங்கள் பிள்ளைகளைப் பார்க்க மிகவும் கவலையாய் இருக்கின்றது. பெற்றோர்களே விழிப்படையுங்கள். ஒன்று சேருங்கள், உங்கள் பிள் ளைகளை உங்கள வீட்டிற்கு உடன அழைத்துச் செல்லுங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இராணுவ...

மணியளவில் தீவகப்பகுதிக்கு அர சியல் பணிகளுக்காக சென்றி ருந்த பொது மக்கள் புளியங்கூடல் சந்திப்பகுதியில் பொது மக்கள் சிலரை கண்டு உரையாடியுள் ளனர். அவ்வேளையில் 3 பிக்கப் வாகனங்களில் ஈ.பி.டி.பி அமைப் பின் ந.மதனராஜா தலைமையிலான குழுவினர், கடற்படை மற்றும் பொலிஸ் பாதுகாப்புடன் அவ்வழியே வருகைதந்துள்ளனர். அவ்வேளை யிலேயே அங்கு நின்ற பெண் போராளிகளை ஆயுத முனையில் அச்சுறுத்தியதுடன் அவமதிக்கும் வகையில் இக்கும்பல் செயற்பட்ட தாக தெரியவருகிறது. இச்சம்ப வத்தையடுத்து அப்பகுதியில் திரண்ட பொதுமக்களது எதிர்ப்பை அடுத்து ஈ.பி.டி.பி கும்பல் அங்கி ருந்து விலகிச்சென்றுள்ளது. இத னிடையே தற்போதைய தேர்தல் காலப்பகுதியில் பேராளிகளை சீண்டிவிட்டு இவ்வாறான கும்பல் கள் சுயநலம் ஈட்ட முற்படுவதாக அவ தானிகள் கருத்து வெளி யிட்டுள்ளனர். (27)

### திருமலை..

பற்றினர்.கட்டுப்பாடற்ற பகுதிக ளில் உள்ள தமிழ் வாக்களர்கள் கொத்தணி வாக்களிப்பு நிலை யங்களுக்கு வந்து வாக்களிப்பதற் கான போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று அரசாங்க அதிபர் காமினி ரொட் ரிக்கோ தெரிவித்தார். வாக்களர் அட்டைகளைப்பெற்ற சகலவாக் களர்களும் வாக்களிக்க அனும திக்கப்படுவர். தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தப்படமாட்டாது என் றும் கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டது. வாக்களிப்பு தினத்தன்று மேலதிக பஸ்சேவை களை நடத்துவதற்குரிய ஒழுங்கு களை இலங்கைப்போக்கு வரத் துச்சபையினர் மேற்கொண்டிருப்ப தாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட் டது. (25)

### உனது...

யால் சுயநலத்தால் சிதைத்து விடாதே.

அவர்களுக்கு தலைவரை சொல்லித்தானே நீவளர்த்தாய், தமிழீழத்தை சொல்லித்தானே வழியனுப்பிவைத்தாய் உனக்கு வீண் பழிவேண்டாம் மகனே.

உலக நாடுகள் எல்லாம் போன போது நாங்கள் எல்லாம் மனமகிழ்ந் தோம். தமிழீழப் பேச்சு வார்த்தை மேடையில் கோட்டுடனும், சூட்டு டனும் உன்னைக் காணும் போதெல் லாம் என் மகனை மறந்திருப்பேன்.

மட்டக்களப்பாருக்குப் பொறுப் புக்கள் கொடுக்கவில்லை என்று கூறுகின்றாய். உன்னை விடவா பொறுப்பு நீயே சொல்லிவிட்டாய் தலைவரின் வலக்கை என்று அப்படி இருந்தும் ஏன் இப்படி செய கிறாய்?

இவற்றையெல்லாம் உதறித் தள்ளி யாருக்குச் செஞ்சோற் றுக்கடன் தீர்க்கப்போகின்றாய். சிறந்த வீரன் என்று தமிழீழ மக் களால் போற்றப்பட்ட நீ இன்று துரோகி ஆகிக்கொண்டிருக் கிறாய். இதுதான் என்மனக்கவலை.

மட்டக்களப்பு மண்ணிற்கு உன் னால் வந்த பெருமை அது உன் னாலேயே குழிதோண்டி புதைக் கப்பட்டுக்கொண்டிருக்கிறது. மனச் சாட்சியை தொட்டுப்பார்.

ஒரு மகனை,உம்முடன் கொண்டு திரிந்து வவுனதீவில் கொடுத்து விட்டாய். ஓயாத அலைகளில் ஒருத் தனைக் கொடுத்தேன். சுகயீனத் தால் ஒரு மகனை இழந்தேன் என் நெஞ்சம் பதறுகிறது. உண்மை யான தேசியம் தோற்றுவிடக் கூடாது. எமது உறவுகளுக் கிடையே ஒரு பிளவு என்று என் உள்ளம் துடிக்கிறது.

தயவு செய்து மாவீரனின் தாய் என்ற வகையில் மீண்டும் மீண்டும் கூறுகிறேன். சகோதரச் சண் டைக்கு வித்திடாதே. உரிமைக் காய் மடிந்த மாவீரர்களுக்கு களங்கம் ஏற்படுத்தாமல் ஒதுங்கி வாழ்.

நானாவது எனது பிள்ளைகள் எதிரியுடன் சண்டையிட்டு வீரச் சாவடைந்தார்கள் என்று எனது மனதைத் தேற்றிக்கொள்வேன். உண்மைக்கு முரணான பொய் களைக்கூறி பிரதேசவாதத்தைத் தூண்டி உறவுக்குள் சண்டை ஏற் படுத்தி பிள்ளைகளை பெற்றெடுத்த தாய்மாரின் மனதை உனது கடும்போக்குக்காக வேதனைப்படுத் தாதே. இதற்காகவா பிள்ளை களை ஆலயங்களில் வைத்து ஒப்படைத்தனர், ஒப்படைக்கும்போது தாய்மாரின் கண்ணீர், கதறல் இது உனக்கு தெரிய வாய்ப் பில்லை. உன் மனம் நெகிழ்வதற்கு அவர் கள் உனது பிள்ளைகள் இல்லைத் தானே! எனவே தம்பி கருணா நல்ல முடிவை எடுத்து எங்கு சென்றா வது உனது மனைவி பிள்ளை களுடன் வாழ் என் பிள்ளை களின் தியாகத்தை கொச்சப்படுத் தாதே. தயவு செய்து எங்காவது சென்று வாழ்.

இப்படிக்கு உனது மனம் திரும் பலை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் மாவீரரின் தாய்.

# சாவு அறிவித்தல்



திரு. வைத்திலிங்கம் கதிரவேல்

| தோற்றம் | உதிர்வு |
| --- | --- |
| 28-09-1926 | 15-03-2004 |

புன் சிரிப்பு கள்ளமில்லாப் பார்வை
இறைவன் நாமம் உதட்டளவில் இல்லை
தத்துவங்கள் எல்லாம் தங்களிடம் தோற்கும்
தாராள சிந்தை பள்ளியினை வளர்க்கும்
ஏழாண்டு எம்மை ஏற்றி வைத்தீர்
ஏழ் பிறப்பும் மறக்க முடியாது ஐயா
ஏங்கித் தவிக்கின்றோம் ஏமாந்துவிட்டோம்.

இவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நாமும் துயரில் பங்கேற்கின்றோம்.

க. இரத்தினகுமார் குடும்பத்தினர்

(4324)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.